# விளக்கு









ஜனவரி 2004

# விளக்கு

- ஆசிரியர்களின் வாண்மை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.
- நாடும், நாமும் கல்வி ஒழுக்கங்களால் சீர்பெற வேண்டும்.
- மாணவர்களின் கல்வித்தரம் எமது மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் மேம்பட வேண்டும்.
- கல்வி நிர்வாகம் எமது மண்வாழ் மக்களின் கல்விச் சீராக்கத்திற்கு உதவுதல் வேண்டும்.
- உங்கள் கருத்துக்களை, ஆலோசனைகளை, எதிர்பார்ப்புக்களை, அனுபவங்களை, எமக்கு எழுதி அனுப்புங்கள்.
- உங்கள் வலிமைமிக்க ஆங்கங்களால் விளக்கைத் தூண்டுங்கள்.
- **விளக்கு** தமிழ் நிலத்தின் கல்வி அபிவிருத்திக்கு ஒளி தந்து விளங்கட்டும்.

தொடர்புகளுக்கு:
*ஆசிரியர்*
விளக்கு.
தமிழர் கல்வி மேம்பாட்டுப்பேரவை,
யாழ் வலயக் கல்விப்பணிமனை,
யாழ்ப்பாணம்.

## கட்டுரைகள்:
* சமூகம் கல்வி மயமாகுதல்.
* ஆரம்ப பாடசாலையில் சமயம் கற்பித்தல்.
* தரமான உள்ளீடுகள்.

## தொடர்கள்:
* ஒரு பாடசாலையின் வளர்ச்சியில் பகிரங்கப்படுத்தல்.
* அங்கும் இங்கும்.
* வாசித்தோம் வாசிப்போம்.

## கவிதைகள்:
* படிக்க வேண்டும்.
* உன்னுழைப்பு.
* நலம் விளைக்க வருவாய்.

## அனுபவத் தொடர்:
* முதல்...

## சிறுகதைகள்:
* அவனை விட்டுவிடுங்கள்.
* ஒருநாள் விடுகை.
* சொல்வழி கேட்கமாட்டேன்.

## வாசகர் கடிதம்:
* எதிரொளி.

## கேள்வி பதில்:
* மெய்யறியக்கேளுங்கள்.

ஜனவரி: 2004
ஆசிரிய வாண்மை விருத்திக்குழு வெளியீடு.
இதழாசிரியர்: செ. மகேஷ்
கணனி வடிவமைப்பு: ப. பிருந்தா
விலை: ரூபா 30/=



முகவரி:
**விளக்கு**
தமிழர் கல்விமேம்பாட்டுப் பேரவை,
யாழ் வலயக்கல்விப்பணிமனை,
யாழ்ப்பாணம்.

# விளக்கு

அகல்: 03 சுடர்: 04
சுபானு வருஷம் மார்கழி, தை
திருவள்ளுவர் ஆண்டு - 2035
ஜனவரி 2004

# தரமான கல்விக்குத் தகைமையுள்ள ஆசிரியர்

காலம் விரைவாகக் கடந்து செல்லுகிறது.
ஒரு புதிய ஆண்டு பிறந்தது.
ஒரு வருடத்தின் ஆரம்பம்.

அதிபரும், ஆசிரியரும், மாணவர்களும் புத்தாண்டு வாழ்த்துக்களுடன் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்கின்றனர்.

புதிய உத்வேகத்தோடு மீண்டும் பாடசாலைகள் தொடங்குகின்றன.

தரம் ஒன்று, ஆரம்பவகுப்பிற்குப் புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

வகுப்பேற்றம் பெற்றுப் புதிய வகுப்புகளுக்கு மாணவர்கள் கல்விகற்க முந்துகின்றனர்.

இலவசமாகப் புதிய பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. வகுப்பறைகள் புதிய கோலங் களைப் பெறுகின்றன. புத்தாண்டு நாட்காட்டிகள், படங்கள், மேசைவிரிப்புகள் எல்லாமே புதியன வாகின்றன.

புதிய ஆண்டின் தொடக்கம், பாடசாலைச் சமூகத்தால் வரவேற்கப்படுகின்றது.

யாவராலும் வரவேற்கப்படும் புதிய ஆண்டின் தொடக்கத்தில் ஆசிரியர்களாகிய நாமும் புதிய சபதம் செய்து புதிய ஆண்டை வரவேற்போம்.

''தரமான கல்வியை எமது மாணவர்களுக்கு வழங்குவோம்''

''தகைமையுள்ள ஆசிரியர்களாகுவோம்.''

எமது மாணவர்களின் கல்வியை வளர்த்தெடுக்கும் பணியில் ஆசிரியர்களே முன்னணியிற் திகழ்கின்றனர். அவர்களால் வழங்கப்படும் கல்வி தரமானதாக அமைவதற்கு, அவர்கள் தகுதியான தகைமையுள்ளோராக வளர்த்தெடுக்கப்படுவது அவசியமாகின்றது. ஆசிரியர்களின் தகைமைக்கேற்பவே கல்வியின் தரம் உயர்த்தப்படுதல் கூடும் என்பது நிச்சயமானதாகும். எனவே ஆசிரியர்களின் தகைமையின் உயர்ச்சியே கல்வித்தரத்தை உயர்த்தும் உந்துசக்தியாகும். தகைமைகள் யாவும் சான்றிதழ்கள் மட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்டவைகளாக அன்றி., செயல்வேகம் கொண்டவைகளாக, பண்புரீதியான வினைத்திறனால், விளைதிறனை வெளிப்படுத்துபவைகளாகவும் அவை அமைதல் வேண்டும். அதுவே ஆசிரியத்துவத்தின் ஆளுமை விருத்தியின் வெளிப்பாடாகும். மாணவனின் கற்றலை மேம்படுத்த வேண்டுமெனின் ஆசிரியர் தமது கற்றலைத் தொடர்தல் அவசியமாகின்றது. அதற்கென வாசிப்புத்திறனை விருத்திசெய்வோம். வாசிப்பதற்கு கல்விசார் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும், நூல்களும் தேவைப்படுகின்றன. அத்தகு சிறப்புடனும், விருப்புடனும் ஆசிரியவாண்மையை விருத்திசெய்யும் நோக்குடனும் வெளிவரும் ஒரேயொரு சஞ்சிகை " **விளக்கு**". அது கொண்டுள்ள ஆசிரியவாண்மை விருத்தியை நோக்கிய பயணத்தில் ஆசிரியர்கள் அனைவரும் பயன்பெறவேண்டும் என்பதே, எமது சிறப்பான எதிர்பார்ப்பாகும்.

கல்வியியலாளர்களின் வழிகாட்டலில் எமது ஆசிரிய சமூகத்தினரிடம் பெருகும் வாண்மை விருத்தியால் எமது மாணவர்களின் கல்வித் தரம் உயர்த்தப்பட நாம் முன்னின்று உழைப்போம்.

**கல்வியை வளர்ப்போம், கல்வியால் வளர்வோம்.**

...நுசன நூலகம்
24 FEB 2004
மாநகர சபை,
...ப்பாணம்.



# படிக்க வேண்டும்

உன்னுடைய திறமைக்கு ஏற்ற வேலை
உனை மதித்து ஒருவருமே தந்தாரில்லை.
தன்னுடைய தகுதிக்குப் பொருத்தமாகத்
தன்னுழைப்பைப் பேணியிங்கு செய்தோரில்லை.
என்னுடைய படிப்புக்கும், பட்டத்திற்கும்
எழுதியன்று சித்தி பெற்ற பரீட்சை பார்த்து
முன்னிருத்தி வேலையொன்று தருவோர் தேடும்
முயற்சிக்கு நானின்னும் படிக்கவேண்டும்.

பட்டங்கள், பரீட்சைகள், சான்றிதழ்கள்,
பலநூறு வென்றாலும் நாட்டின் தேவை
எட்டநிற்க நாளெல்லாம் எழுதிப்பாடம்
எத்தனையோ கற்றாலும் தொழிலொன்றேற்கின்
கட்டாயம் உடலிசைவு கைகால் மூளை
கடினவுழைப் பதுசெய்யும் தேர்ச்சி வேண்டும்.
பட்டறிவும், திறமைகளும், பழக்கம் மெய்மை
பகுத்தறிந்து வாழுமுயர் பண்பும் வேண்டும்.

நெடுந்தீவு மகேஷ்

# சமூகம் கல்விமயமாகுதல்

எந்த ஒரு சமுதாயத்திலும் கால மாற்றங்களுடன் புதிய தேவைகள் எழுவதும், இவற்றை நிறைவு செய்யும் வகையில் மாற்றங்கள் அச்சமுதாய அமைப்பிலும், செயற்பாடுகளிலும் ஏற்படுவதும் இயற்கை. தமிழ்ச் சமுதாயத்தினராகிய எமக்கும் இது விதிவிலக்கன்று.

சமுதாய மாற்றங்களுடன் இணைந்து கல்வி; மாற்றங்களுக்கு உள்ளாவதுடன், இத்தகைய மாற்றங்களைத் தோற்றுவித்து சமுதாயத்திடமும், இளம் தலைமுறையினரிடமும் பரப்புவதற்கான இன்றியமையாத கருவியாகவும், கல்வி செயற்படுகின்றது. இச் செயற்பாட்டைக் "கல்விமயமாகுதல்" என்ற விழிப்புணர்வுச் செயற்திட்டங்கள், விமர்சனரீதியான ஆய்வுகள், வெளியீடுகள் என்பவை ஏற்படுத்தி வருகின்றன.

மேலும் எம் தமிழர் சமுதாயத்தில் எழுந்துள்ள கல்விசார் சவால்களுக்கேற்ப, கல்வியில் புதுமைகளையும், புத்தாக்கங்களையும் ஏற்படுத்தல் தொடர்பான விழிப்புணர்வுகள் போதுமானதாக இல்லை.

1. வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் 94 ஆயிரம் சிறார்கள் பாடசாலைக் கல்வியற்று இருக் கின்ற நிலையில் அதிகரித்த இடைவிலகுவோர் வீதம்.
2. பெற்றோர்களிடையே மாணவரின் கல்வி, கணிப்பீடுகள் தொடர்பான அறிவீனங்கள் நிலவுதல்.
3. கட்டாயக் கல்விச் சட்டப் பிரயோகத்தின் தோல்விகள்,
4. கல்வியை விருத்தியாக்குதல் தொடர்பான மனித – பௌதிகவளப் பற்றாக்குறைகள் காணப்படுதல்.
5. கல்வியில் சம வாய்ப்பு – தமிழ் – சிங்கள பிரதேச கல்வி அபிவிருத்தி ஒப்பீடுகளில் நீண்ட இடைவெளிகள் இருத்தல்.

என்பன சமூகம் கல்விமயமாதலில் பாரிய தாக்கத்தை விளைவிக்கின்றன.

**எல்லாம் வல்லதான கல்வி:**

கல்வி ஒவ்வொருவரினதும் உரிமையாகவும், அது எல்லாவிதமான சுதந்திரங்களுக்கும், புரட்சிகர அரசியல் மேம்பாடுகள் அனைத்துக்குமான அடிப்படையாகவுமுள்ளது. அதன் பயன்கள் இன்னும் முழுமையாக எமது தேசத்தில் எட்டப்படவில்லை. தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய இந்த நேரத்தில் கல்வியின் பயன்கள் எட்டாதவர்களுக்கு அடிப்படைப் பங்கேற்புக்கள் மூலம் அவற்றை எட்டுவதற்கான நடவடிக்கைகளையும் துணிகர முடிவுகளையும் எடுக்கவேண்டியுள்ளது.

இங்கு கல்வியானது மனிதனது அனைத்துச் சவால்களையும் வெற்றி கொள்ள உதவும் கருவியாக உள்ளது. பொருளாதார - அபிவிருத்தித் தேர்ச்சிகள் கல்வியறிவுள்ள மனித வளத்திலேயே தங்கியுள்ளன. அபிவிருத்தி அடைந்துவரும் நைஜீரியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், பிரேசில் போன்ற நாடுகளில் நடைமுறைப் படுத்தப்பட்ட திட்டங்களின்படி குடித் தொகையில் சராசரி கல்வியறிவு மட்டத்தை ஓராண்டில் உயர்த்தும் போது மெய்த்தேசிய உற்பத்தி ஐந்து சதவீதம் வரை அதிகரிப்பைக் காட்டியது. இதன்படி சமூக - அரசியல் - பொருளாதார சவால்களையும் வெற்றி கொள்ளும் முதலீடாகக் கல்வி உள்ளது. சமகால மனிதச் சவால்களை வெற்றிகொள்ள உலகப் பொருளாதார ஒத்துழைப்பு அபிவிருத்தி அமைப்பு (OECD) பின்வரும் நுழைவுச் சீட்டுக்களைப் பட்டியலிடுகின்றது.

I. கல்வி தொடர்பான நுழைவுச்சீட்டு -

எண் - எழுத்து - சித்திர அறிவு, தொடர்பாடல் தேர்ச்சிகள், புத்தாக்கச் செயல் மனோபாவம், கற்கக்கற்றல் தேர்ச்சிகள் என்பன.

II. தொழிலுக்கான நுழைவுச்சீட்டு -

துரிததொழில் நுட்ப மாற்றங்கள் நிகழ்ந்து வரும் உலகில் தொழில் செய்யக் கூடிய கட்டாயக் கல்வியின் அவசியத்தை ஏற்படுத்தல்.

III. தொழில் முயற்சியாளருக்கான நுழைவுச்சீட்டு -

தொழில் முயற்சியாளராக வருவதற்கான கல்வி, முகாமைத்துவ, புத்தாக்க ஆற்றல்கள் பிரச்சினைதீர்த்தல், செயல் நிலை ஆய்வுகள், கண்டுபிடிப்புக்கள் என்பன.

இத்தகைய நுழைவுகளினூடாக வாழ்நாள் முழுவதும் கல்வியளித்து வரக் கூடிய அடிப்படை முறைமைகளைப் பாடசாலைக் கல்வி வழங்க வேண்டும். அதற்கான நான்கு வழிகாட்டற் தூண்களை யுனெஸ்கோ இயம்புகின்றது. அறிந்து கொள்ளக் கற்றல், செய்யக்கற்றல், இணைந்து வாழக்கற்றல், வாழ்ந்திடக் கற்றல் ஆகிய நான்கும் கல்விமயமாதல் எனும் எண்ணக்கரு செயற்பாட்டுக்கு வழிகளைக் காட்டுகின்றன. இவ் வழிகளைச் செயற்படுத்த எமது பாடசாலைகளால் முடிகின்றதா என்பது பற்றிய செயலாய்வுகள், விமர்சனங்கள், என்பனவும் அவற்றினூடான அபிவிருத்திச் சிந்தனைகளும் - செயற்பாடுகளின் தேவைகளும் இன்றுள்ளன.

பயனுள்ள கல்வி முறை மனித வளத்தைச் சேமித்து வளர்த்து அதனால் நாடு பயன்பெற உதவுகின்றது. கல்வித் துறை இன்று மனித வள மேம்பாட்டுத் துறை என்றே அழைக்கப்படுகின்றது. கல்வி ஒரு நாட்டின் தலையாய முதலீடாகும். நாட்டு வளர்ச்சிக்கு இயற்கை வளங்களிலும் மேலாக கல்வியறிவும், தொழிற் பயிற்சியும் பெற்ற மனிதவளமே மிக முக்கியமானதாகும். நாட்டின் முன்னேற்றத்திற்கும். தனிமனிதர்களின் நல் வாழ்வுக்கும் கல்வி உதவும் வகையில் அதனை வழங்கும் பாடசாலைகள் மிக முக்கியபங்கு வகிக்கின்றன. பாடசாலைகள் சமூகரீதியான கல்விமயமாகுதலில் விழிப்புணர்வுகளையும், புதிய செயற்திட்டங்களையும் மேற்கொள்ள வேண்டியுள்ளன. ஆனால் இன் றைய பாடசாலைகள் பல நலிவுகளைக் கொண்டிருக்கின்றன. இவற்றை இனம்கண்டு அகற்றி புதிய கல்விமயமாகுதல் விழிப்புணர்ச்சிச் செயல்முறைகளை நடை முறைப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு கல்விப்பகுதியினரைச் சார்ந்துள்ளது.

**பாடசாலை முகாமைத்துவ நலிவுகள்:**

நூறு சிறைச்சாலைகளையும், மனநோய் வைத்தியசாலைகளையும் திறப்பதற்குப்பதிலாக ஒரு பாடசாலையைத் திறந் தால் போதுமானது. கல்வியின் பரந்த - பரமானந்தம் தரும் உயர் விழுமியங்களைப் பாடசாலை என்ற நிறுவனத்திலிருந்தே சிறப்பாக வழங்க முடியும். தரமான கல்விக்குத் தகைமையுடைய பாடசாலைகள் அவசியம். அவ்வாறான பாடசாலையை உருவாக்கி வழிநடாத்துதலில் அதிபரின் முகாமைத்துவ நடிபங்கு மிக அவசிய மானது.

இன்றைய பெரும்பாலான பாடசாலை அதிபர்கள், தம்முடன் நிர்வாகி, மேற்பார்வையாளர், கணக்காளர், இலிகிதர், களஞ்சியப் பாதுகாவலர், காரியாலய ஊழியர் சேவகர் போன்ற பல நடிபங்குகளை ஏற்கவேண்டியுள்ளனர். அவர்களுக்குப் பெருமளவு வேலைச்சுமை இருப்பதால் மாணவர் கல்வி அபிவிருத்திசார் முகாமைத்துவம் பற்றிச், சிந்திப்பதற்கான நேரமோ இல்லை. ஒரு அபிவிருத்

திசார் முகாமைத்துவம் பற்றியோ, சமூகம் நோக்கிய கல்வியியல் செயற்பாடுகள் பற்றியோ சிந்திப்பதற்கான நேரமே இல்லை. ஓர் அபிவிருத்திசார் சமூகத் தலைவராகச் செயற்பட வேண்டிய அதிபர், தனது பாடசாலையைச் செயற்பட வைக்கப் பலரிடம் கூனிக்குறுகி நடக்க வேண்டியுள்ளது.


காலனித்துவ ஆட்சி அழிந்தும் அந்த மனப்பான்மை இன்னும் அழியாமலுள்ளது. ஒரு அதிபரின் பாடசாலை சார்ந்த நற்செயற்பாட்டினைச் செயலிழக்கச் செய்வதனால் மாணவர், சமூகம் அடையும் தீமைகளை அறிந்தும் அறியாததுபோல் பலர் மௌனிகளாகவுள்ளனர். இதனால் பாடசாலைகளின் உயிர்த்துடிப்பான கல்விச் செயற்பாடுகள் பாதிப்படைகின்றன.

## மேற்பார்வை பலவீனங்கள்:

பாடசாலைக்கல்வி மேற்பார்வை முறைமை இன்று ஆக்கபூர்வமான நிலையிலில்லை. இந்நிலை சரியாக இருப்பின் பல கல்விப் பிரச்சினைகளைப் பாடசாலை மட்டத்திலேயே தீர்க்கக்கூடியதாகவிருக்கும். பாடசாலை மேற்பார்வைத் தரிசிப்புக்களின்போது வரவுப்பதிவேடு, பொருட்பதிவேடு, வசதிக்கட்டணம், பாடசாலை அபிவிருத்திச்சபைக் கணக்கு ஆகியவற்றைக் கணிப்பிடுதலுடனும் ஆசிரியர்களுக்கான அறிவுறுத்தல்களை வழங்குதலுடனும் மேற்பார்வை பெரும்பாலும் நிறைவடைகின்றது.

ஆசிரியர்கள் மீது அளவு கணக்கற்ற குற்றச்சாட்டுக்கள், அச்சுறுத்தல்கள் அள்ளி வீசப்படுகின்றன. மேற்பார்வைக்குழு வருகின்றது என்ற சொல் ஆசிரியர்களுக்கு பயத்தையும், பகைமையுணர்வையும் ஏற்படுத்துகின்றது. ஆசிரியர்களுக்கு அறை கூவல் விடுத்து, மட்டம் தட்டி கையாலாகாதவர்கள் என்ற சான்றிதழை வழங்குகின்ற ஒரு செயற்பாடாகக் குழுமுறை மேற்பார்வை பொதுவாக உள்ளதாக ஆசிரியர்கள் ஐயுறுகின்றனர்.

இவ்வகையில் மேற் பார்வையாளர்களையோ, அதிபரையோ, பெரும்பாலான ஆசிரியர்கள் தமது முகாமையாளர்கள் எனக்கருதாது, தம்மை அச்சுறுத்துபவர்கள் எனஎண்ணித் தூரவிலகுகின்றனர். அவர்கள் மீதான வெறுப்புணர்வு, ஆசிரியத்துவம் - பாடசாலை மீதான வெறுப்புணர்வாகவும், கல்வி உலகத்தின் மீதான மனக்கசப்பாகவும் நிலை பெற்று வளரும் நிலை மிக ஆபத்தானது. இந்நிலையில் தற்போது படிப்படியான மாற்றங்கள் தென்பட்டாலும் இன்னும் பல உயர்வுகளை அடைய வேண்டி உள்ளது. இதற்கு நவீன மனிதவள முகாமை பற்றிய புதிய செல்நெறிகள் தொடர்பான அறிவு தேவையாகவுள்ளது. இதன் மூலமாகவே பாடசாலையிலும் - சமூகத்திலும் கல்விமயமாகுதல் விழிப்புணர்வுச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம். இதற்குக் கீழ்வரும் கல்வி விழிப்புணர்வு முகாமைத்துவ எண்ணக்கருப்படம் விளக்கம் தருகின்றது.



இவ்வாறான சிந்தனைகள் மூலம் எமது பாடசாலைகளிலும் சமூகத்திலும் கல்விமயமாகுதல் விழிப்புணர்வுச் செயற் திட்டங்களை எதிர்காலநோக்கில் விரைவாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. பாடசாலைகள் மாணவர்களைச் சமூகமயப் படுத்துகின்றன. இச்சமூக மயமாக்கலின் பின்னணி கல்விமயமாக்குதலாகும். மாணவர்களைச் சமூகத்தின் நற்பிரஜைகளாக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றுபவையாகவும் பாடசாலை உள்ளன. மாணவர்கள் தமது பொறுப்புக்களையும் - உரிமைகளையும் கற்று எதிர்கால நற்பிரசை என்ற கல்விமயமாதல் பாத்திரவகிபங்கிற்குப் பாடசாலைகளின் - ஆசிரியர்களின் பணி மிக உயர்வாக வுள்ளது.

தற்போதைய தேசிய - சர்வதேசிய கல்விமயமாகுதல் (Educationalisation) எண்ணக்கருத் தேவைகளில்:

* கல்வியில் சமூகத்தினர் அனைவரினதும் பங்களிப்புக்கள்.
* தொடர்பு சாதனங்களின் கல்வி விழிப்புணர்ச்சிப் பங்களிப்புக்கள்,
* தகவல் தொழில்நுட்பம் – கணணி – இணையம் – பல் தொடர்பூடக தொழில்நுட்பம், (Multimedia technology), மாயா நிஜம் (Virtual reality), தொழில் நுட்பங்கள் பயன்பாடு. பன்மொழித்தேர்ச்சி.
* தொழிற் கல்வி – தனியார்துறை முகாமை, விஞ்ஞான ரீதியான சிந்தனைகள்.
* மனித விழுமியங்கள் தொடர்பான ஏற்பாடுகள், தலைமைத்துவம்
* குழுவாக – சமூகமாக இயங்கும் திறன் – இடர்களை எதிர்நோக்கும் ஆற்றல், புத்தாக்கச் சிந்தனைகள்.

என்பன வேண்டப்படுகின்றன.


## கல்வி - தகவல் மயமாதல்:

வரலாற்று ஓட்டத்தில் அறிவியல் புரட்சி, தொழிற்புரட்சி என்பவை ஏற்படுத்திய சமூக - பொருளாதார விளைவுகளைத் தொடர்ந்து இன்று கல்வியினூடு ஏற்பட்டு வரும் தகவல் மயமாதல் புரட்சியும், கல்வி - பொருளாதாரம் - நாகரிகம் - பண்பாடு என்பவற்றில் விரைவான அபிவிருத்திசார் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. இந்த நீரோட்டத்தில் எமது மாணவர்களையும் சமூகத்தையும் விரைவாக இணைக்க வேண்டியுள்ளது.

இன்றைய உலகம் கல்வி - தகவல்களாலேயே ஆளப்படுகின்றது. தகவல்களை ஆள்பவர்களே உலகத்தை ஆள்பவர்களாகவுள்ளனர். தகவல்களின் அசைவியக்கம் விரைவாக நிகழும் இன்றைய உலகில் ஒரு சமூகத்தின் - இனத்தின் பலமான அபிவிருத்தி தகவல்களின் பயன்பாட்டிலேயே தங்கியுள்ளது. இப்பயன்பாட்டுச் செயன்முறையில் பாடசாலைத் தகவல் தொழில்நுட்ப அறைகளும், வகுப்பறைகளும், பாடசாலை நூலகங்களும், சனசமூக நிலை யங்களும், பொது நூலகங்களும், தகவல் தொழில் நுட்ப நிலையங்களும் முக்கியபங்கு வகிக்கின்றன.

**பாலசுப்பிரமணியம் தனபாலன்,**
உபபீடாதிபதி (கல்வியும் தர மேம்பாடும்)
BA (cey), Dip in Ed. (merit) M.Phil in Ed.)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

எமது கல்விச்சமூகச் செயன் முறையில் நவீன தகவல் தொழில்நுட்ப அமைப்புக்களை ஏற்படுத்த, புதிய விழிப்புணர்வுகள் தேவையாகவுள்ளன. உதாரணமாக இந்தியா, இந்தோனேசியா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் Information



Super highways எனப்படும் தகவல் துறை நெடும் பாதைகள், பொதுமக்களின் சமூக ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்டுள்ளன. சிங்கப்பூரின் மதிநுட்பத் தீவு (Intelligent Island) ஒவ்வொரு வீட்டிலும் தகவல் தொழில் நுட்பக்கருவிகளைப் பொருத்தி தகவல் கல்விவழங்குதலும், தென்கொரியாவில் மக்கள் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் பல்லூடகத்தொகுதியும் (Fiber - Optic multimedia net work) ஆகிய தகவல் தொழில்நுட்ப செயற்திட்டங்களெல்லாம் தகவல் மயமாதலின் எதிர்காலவியல் அபிவிருத்தி நோக்கிய திட்டங்களாகும்.

இவ்வாறே எமது பிரதேசங்களிலும் எதிர்காலவியல் (Futurology) நோக்கில் கல்விமயமாகுதல் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி புதிய செயற்திட்டங்களை செயற்படுத்த வேண்டியுள்ளது. கல்விமயமாதலில் எதிர்காலவியலின் பங்கு மிக முக்கியமானதாகவுள்ளது. இங்கு எதிர்கால வியல் என்பது இன்றைய செயற்பாடுகளின் நாளைய விளைவுகளைக் கணித்துரைப்பது; நாளைய எதிர்பார்ப்பிற்கேற்ப இன்றைய செயற்பாடுகளைத் திட்டமிடுவது எனச்சுருக்கமாகக் கூறலாம். எதிர் காலம் பற்றிய விழிப்புணர்வும், உந்துதலும் கல்விமயமாதலுக்கு அடிப்படைகளாகும்.

நாளைய வாழ்க்கைக்கு எந்தவிதமான வளர்ச்சிகள் தேவை என்பதையும், இன்றைய பொறுப்பற்ற செயற்பாடுகள் எதிர்கால வாழ்வை எவ்வாறு பாதிக்கும் என்பதையும் எதிர்கால வியல் கொண்டிருக்கும். நாளைய எதிர்பார்ப்புக்கள் - தேவைகளுக்கு ஏற்ப இன்றைய செயல்களைத் திட்டமிடுவதும் எதிர்காலவியலாகும். எனவே எழுச்சியும் - அபிவிருத்தியும் தேவையான எமது இன்றைய சமூக நிலையில் மாற்றத் திற்கான திறவுகோல்களாகப் பாடசாலைகள் கல்விமய மாகுதல் செயன்முறைகளைத் தனக்குள்ளேயும் - சமூகத்துக்குள்ளேயும் பாய்ச்சுதல் வேண்டும். அவை தொடர்பான வேலைத் திட்டங்களையும் ஆரம்பிக்க வேண்டும். இதற்கென பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், சமூகத்தவர், கல்விப்பணிப்பாளர்கள், கல்வியியலாளர்கள் ஆகியோரின் தியாகமும் - அர்ப்பணிப்பும் அவசியமாக வேண்டப்படுகின்றன. ❑

சிறுகதை

# ஒரு நாள் விடுகை

யூதா தேவாலயத்தின் விடியற் கால மணியோசை " டாண், டாண், என்ற சப்தத்துடன் அடித்து ஓய்கிறது. நேரம் நான்கு மணியாக இருக்க வேண்டும். சட்டென விழிப்பு வந்து விடுகிறது. அவளுக்கு. உடலும் மனமும் புத்துணர்வு பெற்றதாய் ஒரு பூரிப்பு. நேற்றைய களைப்பும், நேற்றைய சோர்வும் கொஞ்சங்கூட இல்லாமல் காலையில் பூத்த புது மலரைப்போல விழிகளைத் திறந்து வெளியே பார்க்கிறாள் அவள்.

இன்னும் விடியவில்லை. பூமியெங்கும் இருட் போர்வை மூடிக்கிடக்கிறது. விடியலுக்கான அறிகுறியாய் எங்கோ தொலைவில் ஓரிரு சேவல்களின் மெல்லிய கூவல் ஒலி கேட்கிறது. ஏதோ ஒரு சின்னக் குருவியின் சிணுங்கல் ஒலியும் ஒருமுறை கேட்டு அடங்குகிறது.

நான்குமணி! அவள் பம்பரமாய்ச் சுற்றத் தொடங்குகின்ற நேரம் அதுதான். வீட்டு வேலைகள் முடித்து, பிள்ளைகளையும், கணவனையும் வெளியே அனுப்பி ஏழு நாற்பத்தைந்துக்குப் பாடசாலைக்குப் போகும்வரை அவள் இயந்திரந்தான். அதற்குப்பிறகு பாடசாலை வேறொரு உலகம். அதிபர், ஆசிரியர், மாணவர் என்ற வட்டத்துக்குள் சுற்றிச் சுழன்றுவிட்டு மறுபடியும் இரண்டு முப்பதிற்கு வீடு. கணவன், பிள்ளைகளுடன் அன்பைப் பரிமாறவோ, அமைதியாய்க் கலந்து உறவாடுவதற்கோ அவகாசமில்லாத அவசர வாழ்க்கை.

யூதா தேவாலயத்தின் மணியோசை "டாண், டாண்" என்ற சப்தத்துடன் அவள் நாடி நரம்புகளை தட்டி எழுப்புவதாய் மீண்டும் ஒலிக்கிறது.

"ஓ.................. நேரம் அஞ்சு மணி"

மனம் அடிப்போடு சொன்னாலும் உடல் எழும்ப மறுக்கிறது. "இன்றைக்கு எனக்கு என்னவாயிற்று?" அவள் மனம் அவளையே கேள்வி கேட்கிறது.

"நேரம் அஞ்சுமணியாய்ப் போச்சு. கெதியாய் எழும்பும்.." கணவன் அவளை அவசரப்படுத்திக் கொண்டே எழுந்தான். யூதா தேவாலய மணிதான் அவனையும் எழுப்பியிருக்க வேண்டும். வழக்கமாகவே அந்த மணிச்சத்தத்திற்கு எழுந்து விடுகின்ற பழக்கம் அவனுக்கு உண்டு. "என்ன எழும்பாமலிருக்கிறீர்...? பள்ளிக்கூடம் போகேலையே?" அவன் மீண்டும் அவளைக் கேள்வி கேட்கிறான். நான்கு மணிக்கு விழிப்பு வந்ததிலிருந்து அவள் தனக்குத்தானே வினாக்கேட்டு விடைதெரியாமல் தவித்த கேள்வி இதுதான். அவள் பதில் கூறாமல் வெளியே பார்க் கிறாள்.

கிழக்கு வானம் மெதுவாக வெளுக்கத் தொடங்கிவிட்டது. சேவல்கள் கூவும் சப்தம் அவசர அவசரமாய் கேட்கிறது. ஏதேதோ குருவிகள் தத்தமது குரல்களில் கூவியபடி எங்கோ பறந்து கொண்டிந்தன. பூக்களின் மெல்லிய நறுமணம் மூக்கைத் துளைத்து உற்சாகத்தைத் தந்தது.

"ஓ.... எவ்வளவு அழகான காலைப்பொழுது?"

அவள் வாய் மெதுவாக முணு முணுத்தது. இந்த அழகான காலை நேரத்தை எப்போது அவள் அனுப வித்தாள்?

இந்த நேரத்தில் அவள் மத்தி யானச் சமையலுக்காய் அடுப்புடன் போரா டிக் கொண்டிருப்பாள். இரண்டு அடுப்பும் கொழுந்து விட்டு எரிய, காலை உணவும் மதிய உணவும் வெந்து கொண்டிருக்க இந்த அழகுணர்வும், இரசனை உணர்வும் கூடவே சேர்ந்து எரிய, விறகுக்கட்டை போல அவளும் வெந்தபடிதான் இருப் பாள். குயிலின் இனிய கூவலையும், குருவி களின் இனிய ரீங்காரத்தையும் கவனிக் காமல் குழம்பின் கொதிக்கும் சப்தத்தை மட்டுமே கேட்கப் பழகிவிட்டன அவள் செவிகள்.

என்ன வாழ்க்கை? என்ன கேவ லம்? என்ன அவசரகுடும்பம். "இண்டைக்கு நான் லீவு......" அரை - மணித்தியாலத் திற்கு முன்னர் பள்ளிக்கூடம் போகே லையே? என்று கேட்ட கணவனின் கேள் விக்கு இப்போதுதான் பதில் சொன்னாள். நான்கு மணியிலிருந்து தன்னைத் துளைத்த கேள்விக்கும் விடைகண்டு விட்ட மகிழ்ச்சி அவள் குரலில் தொனித்தது.

கணவன் அவளை ஆச்சரியமாகப் பார்ப்பது புரிந்தது. லீவு எடுப்பதற்கே விரும் பாத அவள், இன்றைக்கு அவசியமே இல் லாமல் லீவு எடுக்க விரும்புவது அவனை வியப்பிலாழ்த்தியது. ஆயினும் அவன், அவளைக் கேள்வி கேட்டு சங்கடப்படுத்த விரும்பவில்லை. அவள் தொழில், அவள் சுதந்திரம், அவளின் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு. இவைகளில் அதிகம் தலையிட விரும்பாதவன் அவன். ஆதலால் மௌன மானான்.

என்றாலும் இன்றைக்கு அவனுக் கும் லீவுதான். தேங்காய் துருவிக் கொடுப் பதிலிருந்து பிள்ளைகளைக் குளிப்பாட்டி விடுவது. வீடு வாசல் கூட்டுவது யாவற்றிலி ருந்தும் இன்றைக்கு அவனுக்கு விடுதலை.

அவனையுமறியாமல் மனம் விசிலடிக்கத். தொடங்கியது.

அவள் எழுந்துவிட்டாள். அவசர மில்லாமலே வீட்டு வேலைகளைச் செய் தாள். முகம் கழுவி நிறையப் பூக்களைப் பறித்து சுவாமிப் படங்களின் முன் வைத் தாள். என்றைக்குமில்லாத விசேசமாய் தலைவாரி பொட்டிட்டு அலங் காரம் செய் தாள். அடுப்பு மூட்டி தேநீர் தயாரித்து கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் பரிமாறி னாள். காலை உணவைத் தயாரித்து முடித்த பிறகு பிள்ளைகளைக் குளிப்பாட்டி அவர்களைப் பாடசாலை செல்வதற்காகத் தயார்ப்படுத்தினாள். என்றைக்குமில்லாமல் இன்றைக்குப் பிள்ளைகள் அவளைக் கட்டிக்கொண்டன. அவளையே தலைவாரி விடும்படி பிடிவாதம் செய்தன. அவள் அவர்கள் விருப்பப்படியே நடந்து கொண் டாள். உணவை உண்ணச் செய்து புத்த கப்பை களை ஒழுங்குபடுத்தி வாசல்வரை கொண்டு சென்று வழியனுப்பி வந்தாள். வீதியைக் கடக்கும்வரை அவர்கள் நடந்து போகும் அழகைப் பார்த்தபடியே தன்னை மறந்தாள்.

சட்டென கணவன் நினைவு வர வீட்டிற்குள் ஓடி வந்தாள். அவன் ஒரு வங்கி அதிகாரி. அவனும் கூட புறப்படு வதற்கு ஆயத்தமாகிவிட்டான். கணவ னுக்கு வேண்டியவற்றையெல்லாம் தானே


**செல்வி சி. வேணி**

ஆசிரியை

மு/ உடையார்கட்டு மகா வித்தியாலயம்

செய்தாள். என்றைக்குமில்லாமல் இன்று அவன் மிகுந்த சந்தோசமாய் இருப்பதாய் அவளுக்குத் தோன்றியது. மனைவி பணி விடை செய்து அனுப்புவதுதான் கணவனுக்கு விருப்பமானதோ? அதனால்தான் அனேகமாக ஆண்கள் வேலை செய்யாத பெண்களை திருமணம் செய்ய விரும்புகிறார்களோ?

அவன் போய்விட்டான். வாசல்வரை சென்று அவனை வழியனுப்பினாள். மனம் சந்தோசமாக இருந்தது. என்றைக்குமில்லாத நிம்மதி இன்றைக்கு ஏற்பட்டது. வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட நிறைவு.

"என்ன ரீச்சர்........ இண்டைக்குப் பள்ளிக்கூடம் போகேல்லையே?....'' பக்கத்து வீட்டு பரமேஸ்மாமி வேலிக்கு மேலால் தலையை நீட்டி அவளைக் கேட்டாள். "இல்லை." ஒற்றையாய் பதில் கூறிப் போனவளை அவள் விடவில்லை.


"ஏன்" என மீண்டும் கேட்டாள். ஏன்? அவளுக்கு விடை தெரியவில்லை. சுகவீனமா? களைப்பா? சோர்வா? பாட ஆயத்தம் செய்யவில்லையா? அதிபருடன் முரண்பாடா? இதில் எந்தக் காரணமும் இல்லை. ஆனால் இன்று அவள் சந்தோசமாயிருக்கிறாள். கொஞ்ச நேரத்திற்கு முன் நல்ல மனைவியாய் இருந்தாள். அன்பான அம்மாவாக இருந்தாள். வாழ்க்கையில் பெருத்த நிம்மதியை இப்போது அனுபவிக்கிறாள்.

இதையெல்லாம் பரமேசு மாமியிடம் கூறமுடியுமா? கூறினால் புரிந்து கொள்வாளா? அவள் பதில் பேசாமலே வீட்டினுள் புகுந்தாள். வீடு வெறிச்சோடிப் போயிருந்தது. அங்குமிங்குமாய் புத்தகங்கள், பொருட்கள் பரவியிருந்தன. எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தினாள். வீட்டைப் பழையபடி கூட்டி அழகுபடுத்தி நிமிர்ந்த போது நேரம் ஒன்பது.

இப்போது பாடசாலையில் முதலாம் பாடம் முடிந்திருக்கும். இது தினவரவு பதிகின்ற நேரம். இப்போது என் பத்தாம் வகுப்பு மாணவ தலைவன் தினவரவுப் புத்தகத்துடன் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருப்பான். இன்றைக்கு எந்த ஆசிரியர் அவனுக்குத் தினவரவு பதிந்து கொடுக்கப் போகிறார். தாயில்லாத பிள்ளைபோல, அனாதைக் குழந்தைபோல அவன் அலையப்போகிறான். ஒரு வேளை அடுத்த வகுப்பு மகேந்திரன் சேர் பதிந்து கொடுக்கக்கூடும். ஆனாலும் என் பிள்ளைகள் இன்றைக்கு அனாதைதான். அரவணைக்க யாரும் இல்லாதவர்கள்தான்..

இதயத்தின் ஒரு மூலையில் இனம் புரியாத வேதனை அவளைத் தாக்குகிறது. எந்த ஆசிரியரின் கற்பித் தலையும் பொருட்படுத்தாமல் எப்பொழுதும் சண்டையும் சச்சரவுமாய் அலைகின்ற நரேசுக்கு இன்றைக்கு புத்தி சொல்பவர் யார்? நீ குழப்படி செய்யக்கூடாது. வகுப்பிலை கவனமாய் இருந்து படிக்க வேணும்'' என்று கூறி இன்று முழுக்க அவனை கண்காணிப்பதற்கு யார் இருக்கிறார்கள்? அவள் சட்டென நிமிர்ந்தாள். இதயம் சுக்கு நூறாய் உடைந்ததாய் ஒரு பிரமை. அடுக்களைக்குள் நுழைந்து அவசர அவசரமாய் வேலைகளைத் தொடங்கினாள். கணவனுக்கு மதிய உணவு அனுப்ப வேண்டும் என்ற உணர்வு தோன்ற மளமளவென சமையலில் ஈடுபட்டாள் .

சமையல் முடிந்து அடுக்களையைச் சுத்தம் செய்து வெளியே வரும்போது நேரம் பதினொன்று. இது ஐந்தாம் பாடத்திற்கான நேரம். இன்றைக்கு அவளுக்கு ஐந்தாம் பாடம் உயர்தர வகுப்பிற்குரியது. நேற்று செய்யுட் கோவை படிப்பித்தாள். இன்று ''கொங்குதேர் வாழ்க்கை" எனும் பாடல் படிப்பிப்பதாயும் நயம் கூறுவதாயும் கூறியிருந்தாள்.





"ரீச்சர் . . . இந்தப் பாட்டுக்குத் தானே நக்கீரர் வாதம் செய்தவர். ஏன் வாதம் செய்தவரெண்டதைச் சொல் லுங்கோ" என்று கேட்ட யசோதாவுக்கு "நாளைக்கு விபரமாய்ச் சொல்லுறன்!" என்று கூறிவிட்டு வந்த அவள் இன்றைக்கு வாக்குத் தவறிவிட்டாளா? நல்லாசிரியன் ஒருவன் வாக்குத் தவறமாட்டான் என் பார்கள். அப்படியாயின் அவள் நல்லாசிரியர் இல்லையா? கொடுத்த வாக்கைக் காப் பாற்றும் பண்பு அற்றவளா அவள்? உயர் தர வகுப்பிற்குள் இவள் நுழைந்தவுட னேயே "தமிழ் ரீச்சர் வாறா" என்றபடி எல்லோருக்கும் முதலே இவள் காலடிச் சப்தத்தை உணர்ந்து எழுந்து நிற்கின்ற கண் தெரியாத மாணவர்கள் அனுராதாவும் யசோ தரனும் இன்றைக்கு ஏமாறப் போகிறார்கள். இவள் காலடிச்சப்தத்திற் காய் காத்திருக்கப்போகிறார்கள். அவளுக்கு இதயம் கனத்தது. எதுவுமே செய்யமுடியாத பெருங்கவலை அவளை வாட்டியது.

இன்று பாடசாலையில் எல்லோரும் அவளைப் பற்றித்தான் கதைக்கப் போகிறார்கள். ஒன்றாக இடைவேளையின் போது தேனீர் அருந்துகின்ற லதா ரீச்சரும், யாழினி ரீச்சரும் நிச்சயமாய் அவளை நினைக்கத்தான் போகிறார்கள். "ஒரு நாளைக்குக் கூட லீவு எடுக்கமாட்டா. இண்டைக்கு ஏன் வராமல் விட்டா?." என்று கதைக்கத்தான் போகிறார்கள்.

இப்போது இடைவேளை முடிந் திருக்கும். இனி ஏழு ஏ வகுப்பிற்குதான் அவளுக்குப் பாடம். அடுக்குத் தொட ருக்கும் இரட்டைக் கிழவிக்கும் உள்ள வேறுபாடு பற்றி அவள் படிப்பித்திருந்தாள். இன்று அடுக்குத் தொடர்களை வைத்து வசனம் அமைத்து வரும்படி கூறியிருந் தாள். நிச்சயமாய் எல்லோருமே செய் திருப்பார்கள். வகுப்பில் எழுதவும், வாசிக் கவும் தெரியாத விமலநாதனையும், ரமேசையும் அடிக்கடி பாராட்டி எழுதப் பழக்கியிருந்தாள் அவள். அவர்கள் செய்து வருகின்ற வீட்டு வேலைக்கு Very Good- என்று எழுதிப் பாராட்டுபவள் அவள். இன்றைக்கும் அவர்கள் எழுதி வந்திருப்பார்கள். ஆசையாய் அவளிடம் சரி வாங்குவதற்கும் Very Good எழுதி வாங்குவதற்கும் ஆவலாய் இருப்பார்கள். நிச்சயமாய் இந்தப் பிஞ்சுகள் ஏமாறத்தான் போகிறார்கள்.

"இந்த ரீச்சர் சரியான ஆள்" என்று கோபிக்கத்தான் போகிறார்கள்.

அவளுக்கு உடல் பதறியது. இதயம் சுக்குநூறாய்ச் சிதறுவது போலிருந்தது. எத்தனையோ மாணவர்களையும் சின்னஞ்சிறு பிஞ்சுகளையும் ஏமாற்றி விட்டேன் என்ற எண்ணம் அவளைத் துயரப்படுத்திற்று. ஒரு நல்ல ஆசிரியராய்ப் பணியைச் செய்யாது தவறிவிட்டேன் என்ற ஆதங்கம் அவளை வருத்திற்று. நான் தவறுசெய்து விட்டேன். மன்னிக்கமுடியாத குற்றத்தை செய்துவிட்டேன். இருநூறுக்கும் மேற்பட்ட மாணவர்களின் ஒருநாள் வாழ்க்கையை சிதைத்துவிட்டேன்.

அவள் விழிகள் கலங்கின. கணவனின் சந்தோசமும், குழந்தைகளின் சிரிப்பும் சிறிதாய்த் தோன்ற மாணவர்களின் சோகம் நிறைந்த முகங்கள் அவள் முன் விஸ்வருபம் எடுத்தன. அவள் விழிகளிலிருந்து கண்ணீர் கன்னங்களின் வழியாகக் கீழிறங்கியது.

'இனி மேல் லீவு எடுக்கிற தேயில்லை'

மனம் சங்கற்பம் செய்கிறது. அவள் விம்மி விம்மி அழுகிறாள்.

தான் செய்த தவறுக்குத் தண்டனையை அனுபவிக்கிறாளோ? அப்படித் தானிருக்க வேண்டும்.

## உலகப் புகழ்பெற்ற தலைசிறந்த கணித மேதை சீனிவாச இராமனுஜன்

தமிழ்நாடு கும்பகோணத்தில் வறிய குடும்பத்தில் பிறந்த சீனிவாச இராமானுஜன் அவர்கள் பின்னாளில் உலகப் புகழ்பெற்ற தலைசிறந்த கணித மேதையாக விளங்கினார்.

அக்காலத்தில் இலண்டனில் அமைந்திருந்த கணிதக் கழகத்தில் சேவையாற்றிய இவர், அக்கழகத்தின் தலைவரான பேராசிரியர் "ஹாடி" என்பவரினால் 'கணித நிபுணருக்கு நிபுணர்' எனப் பாராட்டப்பட்டார். இவருடைய கணிதக் கோட்பாடுகள், 'எண்கள் பற்றிய இராமனுஜன் கொள்கை' என உலகக் கணிதக் கோட்பாடுகளில் முக்கியமான ஒன்றாகவும் விளங்குகின்றது.

இவர் ஆரம்பப் பள்ளியில் வகுப்பு - 2 இல் கற்றுக்கொண்டிருந்த போது ஒரு நாள் இவரது கணித ஆசிரியர் எந்த ஓர் எண்ணையும் அதே எண்ணால் வகுத்தால் விடை (01) வருமெனக் கூறி அதை நிருபணம் செய்வதற்காக

$\frac{05}{05} = 1, \frac{14}{14} = 1, \frac{227}{227} = 1$ என உதாரணங்களையும் கூறினார்.

உடனே, இராமனுஜன் எழுந்து பூச்சியத்தைப் பூச்சியத்தால் வகுத்தாலும், '01' தான் விடையாக வருமா? எனக் கேட்டு ஆச்சரியத்தில் ஆழ்த்தியதுடன் $\left(\frac{0}{0} = \alpha\right)$ பூச்சியத்தைப் பூச்சியத்தால் வகுத்தால் 'முடிவிலி' விடையாகும். எனத் தானே விடையையும் கூறினார்.

வன்னியசிங்கம் ஜெயராஜா



# வாசித்தோம் வாசிப்போம்

## மண்மீட்பும் போர்

2500 ஆண்டுகளுக்கும் மேலாக இன்றைய தமிழீழ மண் தமிழரின் வாழ்விடமாக இருந்துவருகிறது. கடந்த 60 ஆண்டுகளுக்கு முன்பு வரை, தமிழீழ மண் யாரால் ஆளப்பட்டு வந்தாலும் தமிழீழ மண்ணாகவே, தமிழர் பகுதியாகவே ஆளப்பட்டு வந்திருக்கிறது.

கடந்த 60 ஆண்டுகளில் தமிழர் மண்ணையும், சேர்த்து ஆளுகின்ற வாய்ப்பைப் பெற்றுவிட்ட சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மண்ணை இல்லாததாக்கும் முயற்சியில் முனைப்பாகச் செயற்பட்டு வருகின்றனர். இருபெரும் சிங்களக் கட்சியினர் இலங்கையை மாறிமாறி ஆண்டு வருகின்றனர். இவர்கள் ஆட்சியில் இவர்களுக்கிடையே பல்வேறு செயற்பாடுகளில் நடைமுறையில் வேறுபாடு ஏற்பட்டு பல்வேறு திட்டங்களைத் தாம் விருப்புக்கேற்றபடி மாற்றியும் வந்திருக்கிறார்கள்.

ஆனால், தமிழ் மண்ணைக் கூறு போட்டுத் தமிழர்களின் பகுதிகளிற் சிங்களக் குடியேற்றங்களை நிறுவி. இலங்கையின் எந்தப்பகுதியிலும் தமிழர்களைப் பெரும்பான்மையினராக இருக்கவிடக் கூடாது என்பதில் ஒத்த கொள்கையும் நடைமுறையும் உள்ளவர்களாகவே இவர்கள் இருக்கின்றனர். கடந்த 60 ஆண்டுகளிள் கிழக்கு மாகாணத்தின் அரைப் பங்கு நிலத்தை தமதாக்கிக்கொண்டதுடன் தமிழர் வாழ்ந்து வந்த தொடர்ச்சியான பகுதிகளைச் சிங்கள ஆட்சியாளர் பல கூறுகளாக்கி விட்டனர்.

அதனோடு சிங்கள ஆட்சியாளர்களின் பார்வை வடமாகாணத்தை நோக்கியும் திரும்பி விட்டது. சிங்களக் குடியேற்றங்கள் தொடங்கப்பட்ட காலங்களிலிருந்தே அன்றைய தமிழ் அரசியற்றலைவர்களினதும் மக்களினதும் எதிர்ப்புக்களையும், அமைதி வழிப் போரட்டங்களையும் புறந்தள்ளி, நசுக்கிய சிங்கள ஆட்சியாளர்கள் மடை திறந்த வெள்ளம் போல் சிங்களக் குடியேற்றங்களைப் பெருகவிட்டனர்.



*மன்னார் மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளராகப் பணி புரிந்து நாட்டின் விடிவுக்காய் "ஓயாத அலைகள் மூன்று" களத்தில் வீர காவியமான மேஜர் செங்கோட் டையன் (வேலாயுதம் கதிர்காம நாதன், திருகோணமலை. மண்ணிலே முத்தாக - 08 - 01 - 1972 மண்ணிலே வித்தாக - 23 - 11 - 1999) அவர்களின் நினைவு மலரிலிருந்து வாசித்தோம். வாசிப்போம்.*

வீரஞ் செறிந்த வன்னி மண்ணிற் பாவற்குளம், வேப்பங்குளம் மற்றும் நெடுங் கேணிக்குத் தெற்கே இருந்த பகுதிகளும், சிங்களப் பகுதிகளாகி விட்டன. ஈழத் தமிழரின் பழந்தமிழ்ப்பகுதிகளான புத்தளம் பகுதி தனிச்சிங்களப் பகுதியாகிவிட்டது.

தமிழீழத்தின் தலைநகர் எனப் போற்றப்படும் திருமலை மையப்பகுதியில் 60வீதம் சிங்களப்பகுதியாகி விட்டது. மீன் பாடும் தேனாடாம் மட்டக்களப்பு இரு கூறாக்கப்பட்டு அம்பாறை என்னும் பெயரில் 50வீதம் சிங்களக் குடியேற்றத்தால் விழுங்கப்பட்டுவிட்டது. வடக்கு மாகாணத் தையும், கிழக்கு மாகாணத்தையும் கூறு போட்டுச் சிங்களமாவட்டமொன்றை அமைக் கும் நோக்கோடு முல்லைத்தீவு வவுனியா மாவட்டங்களின் ஒரு பகுதி நிலத்தை உள்ளடக்கிய மணலாற்றுப் பகுதி வெலி ஓயாவாக மாற்றப்பட்டுக்கொண்டிருக்கிறது.

ஆயினும் தமிழ் மண்ணைக் காப் பதற்கும் தமிழ் மக்களைக் காப்பதற்கு மென, தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழீழ விடுதலைப்போராட்டத்தைத் தொடங்கி அதுவீறு பெற்று விட்ட நிலையிலே பிற்காலத்திலேற்பட்ட பல சிங்களக் குடி யேற்றப்பகுதிகளை விட்டுச் சிங்களமக்கள் அச்சத்துடன் ஓடிவிட்டனர் ஆயினும், சிங்கள ஆட்சியாளர்கள் தமக்கு வாய்ப்பு ஏற்படும் காலங்களிளெல்லாம் தமிழ் மண்ணைக் கவருவதிலேயே கண்ணாக இருந்து வருகிறார்கள்.

எனவே, தமிழீழ மக்கள் தாம் காலங்காலமாக வாழ்ந்து வரும் நிலத்தைப் பறிபோகாது காப்பதற்கும் இழக்கப்பட்ட நிலங்களை மீட்பதற்கும் உள்ள ஒரேவழி மண்ணை மீட்பதற்கான தமிழீழ விடுத லைப்போரை வீறோடு மேற்கொண்டு, விரைந்து தமிழீழத்தை அமைத்துக் கொள்வது தான்.

## எயிட்ஸ் எனக்கும் வருமா?

உலகளாவியரீதியில் எயிட்ஸ் ஒரு கொடிய ஆட்கொல்லி நோயாக விசுவரூபம் எடுத்து வருகின்றது. இந்நோய் முதன் முதலாக 1981 ஆம் ஆண்டு அமெரிக்காவில் வாழ்ந்த ஒருவரில் இனம் காணப்பட்டது. எச்.ஐ.வி. என்ற ஒரு வகை வைரசால்தான் எயிட்ஸ் உண்டாவதாக 1984 ஆம் ஆண்டு உறுதிப்படுத்தப்பட்டது.

**எயிட்ஸ் (AIDS) என்றால்........**

பெறப்பட்ட நோய் எதிர்ப்பு சக்திக் குறைபாட்டினால் ஏற்படும் ஒரு நோய் அறிகுறி.

Acquired Immune Deficiency Syndrome என்பதாகும்.

**எச்.ஐ.வி. (H.I.V) என்றால்........**

இது ஒருவகை வைரசு ஆகும்

Human Immune deficiency Virus.

ஆரம்பத்தில் இது அமெரிக்கா, ஆபிரிக்க நாடுகளிலும் பின்பு படிப்படியாக ஐரோப்பா, தென்கிழக்காசிய நாடுகளுக்கும் வேகமாகப் பரவியுள்ளது. தாய்லாந்து, பர்மா, பங்காளதேசம், இந்தியா போன்ற நாடுகளையும் தற்போது குறிப்பாகச் சொல் லலாம். ஆண்டு தோறும் மூன்று மில்லியன் மக்கள் இதனால் இறப்பதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கின்றது.

எயிட்சினால் பாதிக்கப்பட்டவர் களில் 70 வீதமானோர் ஆபிரிக்காவிலும், 17 வீதமானோர் ஆசிய நாடுகளிலும் காணப்படுகின்றனர். இந்தியாவில் 40 இலட்சத்திற்கு மேலானோர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் 7200 பேர் இத்தொற்றுக்கு உள்ளாகியிருப் பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் செப்ரெம்பர் 2003 வரை 507 பேர் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதுவரை 200 பேர் இறந்துள்ளனர். ஆனால் பலர் இனம் காணப்படாமலும் இருக்கலாமெனவும் நம்பப்படுகிறது.

தமிழர் தாயகப்பகுதிகளில் - யாழ்ப்பாணத்தில் 24 பேர் எயிட்சினால் பாதிக்கப்பட்டதாக அறியப்படுகிறது. இங்கு இளம் பருவத்தினரிடம் அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனை, விபச்சாரம், என்பவற்றாலும் வெளிநாடுகளிலிருந்து வரு பவர்களின் தொடர்புகளினாலும் இந்நோய் பரவுவதாக நம்பப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் பணிப் பெண் ணாக இருந்த இளம் பெண் ஒருவர் யாழ் வைத்தியசாலையில் எயிட்ஸ் நோயாளி யாக இனம் காணப்பட்ட பின்பு வன்னிப் பகுதியில் வந்திருந்தவேளை இந்நோயி னால் இறந்தது எம்மால் உறுதிப்படுத் தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் இவ்வளவு வேகமாக எயிட்ஸ் பரவியுள்ளதானது எல்லோரையும் அதிர்ச்சிக்கும், ஆழ்ந்த கவலைக்கும் உள்ளாக்கியுள்ளது.

அயல் நாடான இந்தியாவில் புக லிடம் கோரிய எம்மவர்களில் பலர் தற் போது எம் தாயகத்திற்குத் திரும்பிய வண்ணம் உள்ளனர். அவர்களிற் சிலர் அங்கு வாழ்ந்த வேளையில் அனுபவித்த இன்னல்கள் காரணமாகப் பாலியல் துன்பு றுத்தலுக்கு, உள்ளானதாலும் விபச்சாரம் போன்றவற்றில் ஈடுபட்டதாலும் அத்துடன் நோய் அல்லது காயம் ஏற்பட்டமை கார ணமாக, இக்கட்டான வேளையில் இத் தொற்றுக்குள்ளான இரத்தம் பரீட்சிக்கப் படாமல் ஏற்றப்பட்டதாகவும் அறியப்படு கின்றது. இவ்வாறான சூழ் நிலையில் பாலியல் உறவிலும், மற்றும் எயிட்ஸ் பரவக்கூடிய பல முறைகளிலும் எம் தாய கத்திலும் இந்நோய் பரவும் சாத்தியம் உள்ளது.

இந்நோய் பரவும் வழிகள் பல இருப்பினும் அதிகமாகப் பாலியல் உறவு கொள்ளக்கூடிய வயது எல்லையான 15-50 வயதுக்கிடைப்பட்டவர்களுக்கே இதன் ஆபத்து மிக அதிகமாக உள்ளது. எனவே 14 வயதுக்கு மேற்பட்ட இளம் சந்ததி யினருக்கு எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும்.

எமது இறுக்கமான கலாசாரக் கட்டமைப்பின் காரணமாக இந்நோயின் பரம்பல் மற்றைய நாடுகளைவிட மிகக் குறைவாகவே உள்ளது. எனினும் எதிர் காலத்தில் இதன் பரம்பல் அதிகரிப்பதற்கு புறச்சூழ்நிலைகள் இருப்பதன் காரணமாக 'எயிட்ஸ்' சிலிருந்து எம்மைப் பாது காப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் விழிப் பாக இருக்க வேண்டும்.

**எச்.ஐ. வி. நோய் எதிர்ப்பு சக்தித் தொகுதியை பலவீனமாக்கும் எயிட்சிக்கு மருந்து இல்லை, எதிரான தடுப்பு மருந்தும் இல்லை. ஆனால் எயிட்ஸ் வராமல் தடுக்க முடியும்.**

**எச். ஐ. வி. வைரசு ஒருவரில் இருந்து இன்னொருவருக்கு எவ்வாறு பரவுகிறது....**

* எச் ஐ. வி. தொற்றுக்குள்ளான ஒருவருடன் பாதுகாப்பற்ற முறையில் உடலுறவு வைத்துக் கொள்வதாலும்,
* எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான 'சிறிஞ்' - ஊசிகள் - என்பன வற்றைப் பயன்படுத்துவதாலும்
* இரத்தத் தொடர்பை ஏற்படுத்தக் கூடியவாறான செயல்முறை களாலும், (உதாரணம், பச்சை குத்துதல், சவரம் செய்தல்.)
* இரத்தம் ஏற்றுவதனாலும், உடல் உறுப்புக்களைப் பரிமாறு வதினாலும்,
* எச். ஐ. வி, தொற்றுள்ள கற்பிணித்தாயொருவரின் குழந்தைக்கும், மகப்பேற்றின் போதும், பாலூட்டும்போதும் பரவும் சந்தர்ப்பங்கள் உள்ளன.

**எச்.ஐ.வி. பரவாது எவ்வாறு தடுக்கலாம் ...........**

* நம்பிக்கையான பாதிக்கப்படாத துணையுடன் உடலுறவு வைத்துக் கொள்வதாலும்
* பாதுகாப்பற்ற உடலுறவின்போது ஆணுறையைப் பாவிப்பதாலும்
* ஒருவருக்குப் பாவித்த சிறிஞ், ஊசி, சவரக்கத்தி (பிளேட்) போன்றவற்றை வேறொருவர் பாவிக்காது இருத்தலாலும்.
* இரத்தம் ஏற்று முன்பு அங்கீ கரிக்கப்பட்ட ஆய்வு கூட்டத்தில் பரிசோதித்து உறுதிப்படுத்தி ஏற்றுவதாலும் தடுக்கலாம்.

**எச். ஐ.வி. வைரசு ஒருவருக்குப் பரவாத சந்தர்ப்பங்கள்............**

* கைகளைப் பற்றும் போதும்,
* மலசல கூடங்களைப் பாவிக்கும் போதும்
* தடாகத்தில் குளிக்கும் போதும்,
* தொடுகையின் போதும்
* பூச்சிகள் கடிக்கும் போதும்
* சாப்பிடும், குடிக்கும் பாத்திரங் களைப் பாவிக்கும்போதும் பரவும் சந்தர்ப்பங்கள் இல்லை.

எயிட்சினால் பாதிக்கப்பட்டவர் களை அருவருப்பாகப் பாராமலும், சமூகத் திலிருந்து ஒதுக்காமலும், அவர்களை இகழ்வாகப் பாராமலும் இருக்கவேண்டு மென வலியுறுத்தப்படுகிறது.

ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழ் வோம் எம்மையும் எமது சமூகத்தையும் பேரழிவுக்குள் ளாக்கும் நோய்களில் இருந்து பாதுகாப்போம். மகிழ்வாக வாழ்வோம்.

தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு
Infectious Diseases Control Unit

தமிழீழ சுகாதார சேவை
Timeleeela Health Services

திட்டமிடத் தவறினால்,
தவறு செய்யத்
திட்டமிடுகிறோம்
என்று அர்த்தமாகும்.

அபூர்வா

# முதல்....

(தொடர்ச்சி)

எடுப்பான மூக்கில் சாணகம் போன்ற தொன்று ஒட்டியிருந்தது. தலை மயிர் அடர்த்தியாக ஆனால் அதிகம், மெலனின் நிறப்பொருளை இழந்து வெள்ளையாகி இருந்தது.

முதலில் முளைத்த மீசையும் பிந்திப் பிறந்த தாடியும் வயது வேறுபாடின்றி நரைத்திருந்தது. ஆனாலும் காந்தக் கவர்ச்சிக் கண்கள் ஒளி வீசின.

மணிக்கட்டுவரை சாணகக் குழம்பு தோய்ந்த நிலையில் அரையில் அழுக்குத் துணியுடன் அரைமண்டியில் நின்று கொண்டிருந்தார் வேல்மடு அ.த.க.பா. அதிபர்.

“குட்மோணிங் சேர்” நான் ராஜேந்திரன் ரீச்சிங் அப்பொயின்ட்மன்ட் கிடைத்து உங்கடை ஸ்கூலுக்கு வந்திருக்கிறன்.

“வெல்கம்!.... வெல்கம்!....
நீர் நேற்று வருவீர் என எதிர்பார்த்தனான் பரவாயில்லை இண்டைக்கு செவ்வாய்க் கிழமை “அம்மன்ரை” நாள் அதுவும் நல்லது தான்.”

“பிள்ளைகள்........ “சேர்” ஐக் கூட்டிக் கொண்டுபோய் என்ரை மேசை யருகிலே இருத்துங்கோ.

“தம்பி “ராஜ்” கால் மணித்தியாலம் பொறுங்கோ வோஷ் எடுத்திட்டு வாறன்.” “ராஜ்” என எனது வீட்டுப்பெயரைச் சொன்னதும் அன்பு வலைக்கான முதல் முடிச்சு இடப்பட்டதாக உணர்வு தட்டியது.

சுவர்க் குந்துகளில் நெஞ்சளவில் பெரியார்களின் சிறுசிலைகள், ஜேசுநாதர், மரியாள், அம்மன் சிலைகள் களிமண்ணால் அழகாகச் செய்து அடுக்கப்பட்டமையை பார்த்துக் கொண்டிருந்தேன்.

மர உத்தரங்களில் அழகாக எழுதப்பட்டிருந்த எளிமையான வாசகங்களை ஒவ்வொன்றாக வாசித்து முடித்தேன். ஆணியில் தொங்கிக் கொண்டிருந்த பிரம்பின் கைபிடிக்குள் சிலந்தி வலை பின்னியிருந்தது.

ஆண்டு ஐந்தாக இருக்க வேண்டும் மணியைத் தூக்க முடியாமல் தூக்கி அசைத்தான்.

**தூண்டல் : மணிச்சத்தம்**
**துலங்கல் : நிசப்தம்**

எல்லாப் பிள்ளைகளும் முன்னிருந்த பாலை மரத்தடிக்கு வரிசையாகச் சென் றனர் நானும் பின் தொடர்ந்தேன்.

மண்ணால் சிறு மேடை அதில் ஒரு குத்துவிளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது.

“சேர்வாறார்...... சேர்வாறார்..........”

பின்வரிசைப்பிள்ளைகள் அறிவித்தல் கொடுத்தார்கள்.

திரும்பிப் பார்த்தேன் அன்றைய தினம் ஒரு மணித்தியாலயத்திற்குள் இரண்டாவது தடவையாக திகைத்துவிட்டேன்.

நான் பாடசாலைக்குள் உள்ளிடும் போது “எங்கஊர் ராஜா” படத்தில் தகப்பன் சிவாஜி போன்று இருந்த அதிபர் “தங்கப் பதக்கம்” படத்தில் சிவாஜிவருவது போன்று மிடுக்காக வந்து கொண்டிருந்தார்.

தலைமயிர் மீசை எல்லாமே கருகருவென்றிருந்தன. தலைக்குப் பூசிய கிறீம் வாசனையடித்தது. பிறவுண்கலர் லோன்ஸ் புல்ஸ்சிலீப் சேட், பொயின்ரட்

ஷு இடுப்பில் அகலம் குறைந்த பெல்ட்.
பிரார்த்தனை நடந்தேறியது
நற்சிந்தனை சிந்திக்கப்பட்டது
என்னை அறிமுகம் செய்தார்.

''எனக்கும் பிள்ளைகளுக்கும் ஏதாவது இருந்தாச் சொல்லும் தம்பீ'' என்றார்.

நான் என்னை அறிமுகப்படுத்தி, அன்றைய தினம் யாழ்ப்பாணத்திலிருந்து வந்ததையும் இனிமேல் வவுனியாவிலுள்ள நண்பர் வீட்டில் இருந்து வர இருப்பதையும் இன்று போல் அல்லாமல் நேரத்துக்கு வருவேன் என்பதையும் இடையே செருகிச் சுருக்கி முடித்தேன்.

பிள்ளைகள் வரிசையாகினர்
அதிபர் தொடர்ந்தார்.

"இந்தப்பள்ளிக் கூடத்திலை "ரைம் ரேபிள்" என்று ஒன்று இல்லை பிள்ளைகள் 2 மணிக்குப் போயிட்டு பிறகு மூண்டு மணி தொடக்கம் ஏழுமணிவரை இங்கை தான்.

சனிக்கிழமையும் இப்பிடித்தான் ஞாயிறு நான் ஓமந்தை சேர்ச்சுக்கு (Church) போடுவன்... வரேக்கை கறி, கிறி எண்டு வாங்கிக் கொண்டு வந்துடுவன்.

அவவும் ...... அதுதான் ரீச்சரும் குஞ்சுக்குளம் அம்மனிட்டைப் போடுவா அவவும் வரேக்கை புளி, கிளி, கறியோடை வருவா

ஆனபடியால் ஞாயிறு மட்டும் எங்களுக்குப் பள்ளிக்கூடம் இல்லை. என்று சொல்லலாம்'' என்றார்.

"அப்ப.... நான்.... சனி... ஞாயிறு யாழ்ப்பாணம் போய்வரேலாதா சேர்..."

சத்தமிட்டுச் சிரித்தார்.....''நீர் வடிவாகப் போயிட்டு வாரும் நான் எங்கடை கதையச் சொன்னன் என்ரை மிஸ்சிஸ்சும் இங்கதான் ரீச்சர்.... பிள்ளைகளைப் பார்க்க கொக்குவிலிலை இருக்கிற சகோதரி



சிபி. சிவை

வீட்டை போயிட்டா.... அவ இண் டைக்கு விரதம் அதுதான் மெழு கினனான்.... இப்பை வந்து இறங்குவா...

77 கலவரத்தோடை நானும் அவவும் 3 பிள்ளைகளுமாக வந்து இறங் கினனாங்கள் பிள்ளைகள் "ஸ்கொலஷிப்" பாஸ்பண்ணி யாழ்ப் பாணத்திலை படிக் கினம்.


மூத்தவருக்கு உம்முடைய வயது இருக்கும் "பாதருக்கு" படிக்கிறார் அவை யளுக்கு அங்கை உள்ளவை தான் கர்த் தர் குடுத்த பெற்றோர்.

நாங்க இங்கை 115 பிள்ளை களுக்கு தாய்தகப்பணாக இருக்கிறம் இப்ப நீரும் எங்களோடை சேர்ந்திட்டீர் அப்ப எங்களுக்கு இப்ப 116 பிள்ளைகள்'' என்றார்.

பொறுப்பான கடமையை ஏற்கும் கடிதத்தை எழுத ஆரம்பித்தேன் "சுள்" என்றது கதிரைப் பின்னலுக்குள்ளால் நுளம்பும் உள்மனமும் ஒன்றாகக் குற்றின.

மறுநாள் இரவு வீட்டில் படுத் திருந்தேன் அக்கா, வேப்பம்பட்டைத் தண்ணியை குடிக்கச் சொன்னா முதல் நாள் குற்றிய நுளம்பு அனேபிலிஸ் ஆக இருக்கலாம் என்று யாழ்ப்பாணம் "ஓ பி டி" யில் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.

முற்றும்.



# உன்னுழைப்பு

வேற்றூரின் பள்ளியிலேன்
வாத்தியார் பெற்ற பிள்ளை?
சோற்றுக் கடைக்காரனுக்கேன்
சோறுவரும் வீடிருந்து?
ஆற்றும் செயல் சுத்தம்
அறிவழகு உள்ளதெனில்
போற்றுக உன்னுழைப்போ
பொருந்தட்டும் உன்னோடு

உமாபாரதி.

# சொல்வழி கேட்க மாட்டேன்

பண்டாரநாயக்கா விமான நிலையமா? கட்டுநாயக்கா விமான நிலை யமா? இலங்கையின் சர்வதேச விமான நிலையம் எது?

அந்தப் பாடசாலையின் அதிபர் விசுவலிங்கம் தனது பிடியைத் தளர்த்த வில்லை மிகவும் ஆவேசமாக "கட்டுநா யக்கா விமானநிலையமே இலங்கையின் சர்வதேச விமான நிலையம். இலங்கையின் அரசியல் யாப்பையும் பாராளுமன்றத் தேர் தல் முறையையும் மாற்றிய அன்றைய சனாதிபதியே கட்டுநாயக்கா விமான நிலை யமென பெயரையும் மாற்றினார்." எனத் தனது மேசையில் அடித்துக் கூறினார் அதற்கு மறுப்புத் தெரிவித்த சுதர்சன் மாஸ்ரர் அதிபரின் ஆவேசமான நிலையைக் கண்டு மௌனமானார். கட்டுநாயக்காவில் அமைந்துள்ள சர்வதேச விமான நிலையம் அன்றைய தினம் பண்டாரநாயக்கா சர்வ தேச விமான நிலையம் என்றே அழைக் கப்பட்டது. அதிபர் அதனை அன்று அறிந் திருக்கவில்லை. இலங்கையின் அரசியலில் நிரந்தரமற்ற தலைப்பட்டினங்களும், விமான நிலையமும் காலத்திற்குக் காலம் பெயர் மாற்றம் பெறுவது புதுமையானதல்ல. தலைவலியை மாற்றத் தலையணையை மாற்றாமல் உறையை மாற்றுவது இலங்கை அரசியலில் வழமையான விளையாட்டுத்தான். ஆனால் அதிபர் என் றோ செய்தித்தாளில் பார்த்த பெயர் மாற்றத்தை நிரந்தரமாக்கி மீண்டும் ஏற்பட்ட பெயர் மாற்றத்தை அறியாமல் கர்ச்சித்தார். ஆட்சிமாறும் போதெல்லாம் பெயர்மாறு வதும், நிறம் மாறுவதும், இயல்பானது தானே!

அதிபர் விசுவலிங்கம் ஒரு அவசர புத்திக்காரர். ஆனால் அவர் தாமாக மேற்கொள்பவை எதனையும் தெளிந்த சிந்தனையின்றி எல்லாமே சரியென்பதாய் எண்ணி விடுவார். ஏனையோர் சொல்லும் புத்திமதிகளையும் ஏற்றுக்கொள்ளும் நல்ல பண்பும் அவரிடமில்லை. இதனைப் புரிந்து கொள்ள சுதர்சன் மாஸ்ரருக்கு அதிக நேரம் ஆகவில்லை.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக் குத் தோற்றும் அந்தக் கிராமப்புறப் பாடசா லையில் கற்கும் மாணவர்களுக்கு ஊக்கம் கொடுக்கும் நோக்கத்தோடு வகுப்புக்களை நடத்த சுதர்சன் மாஸ்ரர் வந்திருந்தார்.

சுதர்சன் மாஸ்ரர் வயதில் இளை யவர், ஆனால் நகரப்புறப் படசாலையொன் றின் ஆரம்ப வகுப்பு ஆசிரியர். தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் கற்றலுக்கு வழிகாட்டுவதில் மகா கெட்டிக்காரன்.

கிராமப்புறப் பாடசாலை மாணவர் களுக்குக் கற்றல் கற்பித்தலில் ஊக்கம் வழங்கவேண்டும் என்பதற்காக மேலிடம் அவரை இப்பாடசாலைக்கு அனுப்பியி ருந்தது

ஆனால் அதிபரோ "நானோ, எல் லாம் தெரிந்தவன்'' "எத்தனை வருட அனுபவமுள்ளவன்'' என்னையும் மீறி ஒரு சின்னப்பயல் என்னைத் தாழ்த்தும் முக மாக எனது பாடசாலை மாணவர்களுக்கு கற்பிக்க வந்துவிட்டானே என எண்ணிய போது அது அவருக்கு அவமானமாகப் பட்டது. அத்துடன் இலங்கையின் சர்வதேச விமான நிலையத்தின் பெயரை சுதர்சன் மாஸ்ரர் மறுத்துரைத்தமையும் அவரை ஆத்திரம் கொள்ளச் செய்தது.

"நான் ஒரு அரசியற் பட்டதாரி எனக்குப் படிப்பிக்க வேண்டாம்" என்று ஒரேமூச்சில் சொல்லிமுடித்த அதிபரை அமைதியாய்ப் பார்த்து நின்ற சுதர்சன் மாஸ்ரர் அவரது வாதத்துக்கு எதிர்வாதம் செய்து அவருக்கு ஆத்திரமூட்டத் துணியாமல் அவரது கருத்துக்கு மதிப்பளித்து மௌனமானார்.

அதிபரின் அந்த அலுவலக அறை, பாடசாலையின் ஒரு பகுதியாகத் தெரியாத வகையில் மிகவும் அழகான படங்களாலும் பல்வேறு வண்ணப்பொருட்களாலும் உயர்வாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதிபரின் மேசை பூ வேலைப்பாடுகளுடனான விரிப்பினால் போர்த்தப்பட்டிருந்தது.

அதிபரின் மேசைக்கு நேரெதிரே சுவரில் இருந்த மாணவர் வரவினைப் பதியும் அந்தக் கரும்பலகையில் அன்று வருகை தந்த மாணவர்களின் விபரம் எழுதப்பட்டிருந்தது. 105 ஆண் பிள்ளைகளும், 107 பெண் பிள்ளைகளும் அன்று அப்பாடசாலைக்கு வருகை தந்திருந்தனர் ஆனால் இருபாலாரையும் கூட்டிய மொத்தத் தொகை 112 எனக் குறிப்பிட்டிருந்ததை சுதர்சன் மாஸ்ரர் கவனித்தார்.

அதில் காணப்பட்ட தவறை அதிபருக்குச் சொல்லலாமா, விடலாமா அப்படிச் சொல்லப்போனால் ஒரு சிறிய கூட்டலைக் கூடக்கவனித்து கூட்டத் தெரியாதவர் என்று தன்னை கணிப்பீடு செய்வதாக அதிபர் எண்ணக்கூடும் என சுதர்சன் மாஸ்ரர் பயந்திருந்தார். இருந்தாலும் பிழைகளைத் திருத்த வேண்டும்; அவ்வாறு பிழைகளைத் திருத்தம் செய்யாவிட்டால் பிழைகள் பிழைகளாகவே இருந்துவிடும். சிலவேளைகளில், தொடரும் பிழைகளோ சரி எனக் கருதும் நிலையும் ஏற்படலாம் என்றெல்லாம் எண்ணியவாறு கரும்பலகையைக் காட்டியவர்.......

"சேர், அந்த மாணவர் வரவுப் பதிவில் கூட்டுத்தொகை பிழைபோலத் தெரிகிறது. யாரோ மாணவர்கள் கூட்டி..." என்று வசனத்தை முடிக்காமல் நீட்டி இழுத்தார்.

திடீரெனக் கூட்டுத் தொகையைக் கவனித்த விசுவலிங்கம் அதிபருக்கு அதிற் காணப்பட்டவை பிழை என்பது தெரிந்தாலும் இந்தச் சின்னப் பையன் சொன்னதைக் கேட்டு அதனை உடனேயே திருத்துவதா-என்ற போக்கில் "ம்" என்ற மௌன ராகத்துடன் அந்தப் பிழையைத் திருத்த வேண்டுமென்ற எதிர்பார்ப்பை அலட்சியம் செய்தார்.

அவரது மனப்பாங்கைப் புரிந்து கொண்ட சுதர்சன் மாஸ்ரர் அதற்கு மேலும் அவருடன் சுமுகமான கலந்துரையாடலை நடத்துவது கடினம் என்பதைத் தெரிந்து கொண்டார்.

மேலும் நேரத்தைக் கடத்தாமல் "தரம் 5 மாணவர்கள் எங்கே இருக்கிறார்கள்?" என்ற கேள்வியொடு அங்கிருந்து அகல முயன்றார்.

அதிபர் மேல்வகுப்பு மாணவன் ஒருவனை அழைத்து, வகுப்பறையைக் காண்பிக்கும் படிகூறி அவனை மாஸ்ரருடன் அனுப்பி வைத்தார்.

வகுப்பறையில் தரம் - 5 மாணவர்களுடன் நின்றிருந்த வகுப்பாசிரியைகளின் உதவியுடன் தனது கற்பித்தற் பணியைத் தொடர்ந்த சுதர்சன் மாஸ்ரர், மாணவர்களின் மகிழ்ச்சிகரமான கற்றலோடு இணைந்து பிற்பகல் 2 மணிவரை பயனுடைய கற்பித்தலை நிகழ்த்தித் திருப்தியடைந்தார்.

அதிபரோ சுதர்சனின் வகுப்பறைக்குச் செல்லவில்லை.

**செல்லமகேந்திரன்**

தனது வருகையையும் தனது கற்பித்தலையும் அலட்சியம் செய்த அதிபரின் செயல் சுதர்சனின் மனதிற் பெரிதும் வருத்தத்தை ஏற்படுத்தியது. தனக்கு உதவிய அந்த வகுப்பாசிரியைகள் பற்றிப் பெருமைப்பட்டுக் கொண்ட சுதர்சன் வகுப்பின் இறுதியில் மாணவர்களுக்கு ஒரு நகைச்சுவைக் கதையைச் சொல்லி தன் மன வேதனையை மகிழ்வாக்க எண்ணினார்.

"ஓருரில் எல்லாம் தெரிந்தவன் நான் என எண்ணும் ஒரு இளைஞன் இருந்தான் அவன் எந்த வேலையையும் சரியாகச் சிந்தித்துச் செய்வதில்லை. அத்தோடு ஏனையோர் சொல்லும் புத்திமதிகளைக் கேட்டு அதன்படி செய்யும் நல்ல பண்பும் அவனிடத்தில் இல்லை. அவன் செய்பவை யாவும்சரி என்று எண்ணுவதுடன் மற்ற வர்கள் சொன்னபடி செய்தால் தனக்கு அவமானம் என்றும் அவன் நினைத்தான்.

அவன் ஒரு நாள் ஒரு சிறிய பூனைக்குட்டியை குளமொன்றில் குளிப்பாட்டினான் அப்பொழுது அந்த வழியாக வந்த ஒரு முதியவர் "அடே தம்பி பூனைக் குட்டியைக் குளிப்பாட்டாதே அது முழுமையாக நனைந்தால் செத்துப்போகும்" என்றார். ஆனால் மற்றவர்கள் சொல்லும் எதனையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கற்ற அந்த இளைஞனோ அப்பெரியவரைப் பார்த்து,

"என்னுடைய வேலையைச் செய்ய எனக்குத் தெரியும். நீர் வாயைமூடிக் கொண்டு உம்முடைய வேலையைப் பார்த்துக் கொண்டு போம்" என்று சொன்னான்.

பெரியவர் மௌனமானார். மேலும் எதுவும் பேசாமல் அவர் போய்விட்டார்.

சிறிது நேரத்தின் பின்னர் அப்பெரியவர் அவ் வழியே திரும்பி வந்தபோது இறந்துபோன பூனைக்குட்டியை வைத்துக்



கொண்டு அந்த இளைஞன் அழுது கொண்டிருந்தான்.

அதைக் கண்ட பெரியவர் இளைஞன் மீது அனுதாபம் கொண்டு "நான் உனக்குச் சொன்னதைக் கேட்காமல் பூனைக்குட்டியைக் குளிப்பாட்டினாய் அதனால் அது இறந்து போய்விட்டது பார்த்தாயா" என்றார்.

எதனையும் ஏற்றுக்கொள்ளும் மனவிருப்பற்ற அந்த இளைஞனோ பெரியவரைப் பார்த்து "ஐயா நீர் சொன்னது போல் பூனைக்குட்டியைக் குளிப்பாட்டியதால் அது சாகவில்லை. பூனைக்குட்டி நனைந்து ஈரமாக இருந்ததால் நான்தான் அதனைப் பிழிந்தேன் அதனால்தான் அது இறந்தது" என்றான்.

அதனைக் கேட்ட பெரியவர் அந்த இளைஞனின் அறியாமையை எண்ணிப் புன்னகைத்தபடி தன் வழியே போய்க் கொண்டிருந்தார்.

சுதர்சன் மாஸ்ரர் கதையைச் சொல்லி முடித்ததும் மாணவர்களும் வகுப்பாசிரியர்களும் பலமாகச் சிரித்தனர்.

அத்துடன் வகுப்பை நிறுத்தி, புறப்பட ஆயத்தமான சுதர்சன் மாஸ்ரர்

அதிபரைச் சந்தித்துச் சொல்லிப்போக விரும்பினார். அதிபரின் அலுவலகத்திற்குச் சென்று பார்த்தபோது அதிபரை அங்கே காணவில்லை. ஏனைய ஆசிரியர்களிடம் விடைபெற்று பாடசாலையில் இருந்து சுதர்சன் மாஸ்ரர் வெளியேறினார்.


சுதர்சன் மாஸ்ரர் சொன்ன கதையை கேட்டிருந்த வகுப்பாசிரியைகளுள் ஒருத்தியான சாந்திமதி தனது அதிபரிடம் சுதர்சனின் சிறந்த கற்பித்தலைப் பற்றியும் அவர் சொன்ன நகைச்சுவைக் கதையைப் பற்றியும் அடுத்தநாள் சொன்னபோது அக் கதையில் சொல்லப்பட்ட விடயங்கள் “தன்னைச் சுட்டுவதாக அதிபருக்குத் தெரிந்தது” எனி னும் எதனையும் ஏற்றுக் கொள்ளும் மனப் பாங்கற்றவரான அதிபருக்கு அக்கதையிற் காணப்பட்ட நகைச்சுவை மீதும் எரிச்சல் தான் வந்தது.

சரியாக எதனையும் செய்யத் தெரியாவிட்டால் மற்றவர்கள் சொல்லு வதை யாவது கேட்கத்தானே வேண்டும்

அந்த அதிபர் அவ்வாறு சிந்தித் தாரா? என்பது சந்தேகமே!..

# கலையாகும் கடதாசி

## மடிப்போம் ~ நான்முகி




- ★ செவ்வகக்கடதாசி ஒன்றை எடுங்கள் (உரு.1)
- ★ அதன் அகலப்பக்கம் இருகூறாகும் வண்ணம் புள்ளிக்கோட்டில் மடியுங்கள்.
- ★ கடதாசியை விரித்து மடித்த புள்ளிக்கோட்டில் பொருந்த ஒரு பக்க மூலையை மடியுங்கள். அதேவேளை எதிர்ப்பக்கமூலை கூராக மடியவேண்டும். (உரு.2)
- ★ உரு 2 இல் புள்ளிக்கோடிட்ட இடத்தில் மடிப்புத்தோன்ற மேல் நோக்கி மடியுங்கள். (உரு.3)
- ★ உரு 3 இல் புள்ளிக்கோடிட்ட இடத்தில் மடிப்புத் தோன்ற மறுபுறம் திருப்பி மடியுங்கள். (உரு.4)
- ★ இப்பொழுது ஒரு சீரான முக்கோணி உருவாகியுள்ளது.
- ★ உருவான முக்கோணியின் ஒரு பக்க ஓரத்தை இருகூறாக்கும் புள்ளியில் (உரு.5 இல் A.) உச்சி F பொருந்த மடியுங்கள். (உரு.5)
- ★ அவ்வாறே C. உச்சி D யிலும் B. உச்சி E யிலும் பொருந்த மடியுங்கள்
- ★ பின்னர் B,C,F உச்சிகள் பொருந்த குவித்து ஒட்டுங்கள். (உரு.6)
- ★ இப்பொழுது நான்முகி உருவாகிவிட்டது. மேசையில் வையுங்கள்.

# நலம் விளைக்க வருவாய்

## 2004

புத்தாண்டே வருக,
புதுமை பல புரிக,
நித்தமெங்கள் மண்ணில்
நின்றாடும் அவலம்
அத்தனையும் அகல,
அமைதியொளி நிறைக.

போரணைந்த போதும்
போராட்டம் மனதில்,
நீர் வடிக்கும் விழிகள்
நீள் விடிவைத் தேடும்.
ஆர்வமொடு அமைதி
அதுநிலைக்கத் துதிப்போம்.

அருந்தவமே செய்தோம்
அமைதி நிலை வேண்டி,
இரண்டாயிரத்து நான்கு
இன்பமொளிர் விளக்காய்
நிரந்தரமாய் வெற்றி
நிலைபெறவே செய்வாய்.

கல்வி வளம் தேங்க,
கற்ற நல்லோர் ஓங்க,
செல்வமெழில் வீரம்
செழித்தீழம் மகிழ,
நல்வரவாய் நான்கே
நலம் விளைக்க வருவாய்.



பூநகர் எஸ். யசோ,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை,
யாழ்ப்பாணம்.

# ஆரம்ப பாடசாலையில் சமயம் கற்பித்தல்

வியாபகப் பாங்குடைய சமூக நீதியை மனித வாழ்வில் நிலை நிறுத்த வேண்டிய பாரிய பொறுப்பு ஒவ்வொரு தனி நபரினதும் தலையாய கடமையாகும். இப்பணியைத் தார்மீகரீதியில் தேசிய பிணைப்புடன் வலுவூட்டுவதாக சமயக் கல்வி அமைகின்றது. ஒழுகலாறு, ஒழுக்க வியல்,சமயம் தொடர்பான கல்வி மூலம் மனித வாழ்வில் மிகப்பொருத்தமான நெறிமுறைகளைத் தெரிவு செய்யவும் ஒழுக்கநெறி, அறநெறி, சமய நெறி சடங்குகள், சம்பிரதாயங்கள், என்பவற்றுக்குப் பொருத்தமான முறையில் செயற்படவும் தனியாள் விழுமியங்களை நன்கு மதித்தொழுகவும். சமயக்கல்வி அடித்தளமாக அமைய வேண்டும்.

நவீன பாடவிதானம் சமய பாடத்தில் மிகுந்த கரிசனை காட்டியுள்ளது. 1947ல் பாடசாலைகளில் சமயக் கல்வி வலுவூட்டப்பட்டிருந்த போதிலும் 1972 வரை சமய பாடம் முக்கியமானதோர் பாடமாகக் கருதப்படவில்லை. ஆயினும் ஆசிரியர்களின் நேரசூசியில் குறை நிரப்புப் பாடமாகவே சமய பாடம் அமைந்திருந்தது. இக்காலப்பகுதிவரை கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பொருளாதாரப் பெறுமானமுள்ள பாடங்களுக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தன. அத்துடன் சமயபாடத்திற்கு முக்கியத்துவம் வழங்கப் படவேண்டும் என்ற நோக்கில் 1972ல் கல்வி மறுசீரமைப்பை முன் வைத்த கல்வியியலாளர்கள் பாடவிதானத்தில் பெறுமானமிக்க கனதியான பாடமாகச் சமய பாடத்தை முன் வைத்தனர். எனினும் நவீன சமூகத்தில் பொருளாதார செயல் முறைப் பெறுமானமுள்ள பாடங்களில் காட்டப்படும் அக்கறையும், கரிசனையும் சமய பாடத்திற்குக் காட்டப்படவில்லை என்ற குறைபாடு சுட்டிக் காட்டத்தக்கது.

மாறி வரும் உலகில் தொழிநுட்ப வளர்ச்சி அதீத முன்னேற்றமடைந்து வருகின்றது. அதற்கேற்றவகையில் இரக்கம், கருணை, சமத்துவம் போன்ற வற்றிலான பண்பு சார் விருத்தியின் வளர்ச்சிக்குப் பதிலாக அவை தேய்வடைந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. அறநெ றியற்ற பௌதிக முன்னேற்றம் பயனற்றது என்பதை இன்று எல்லோரும் உணர்ந்துள்ளனர். இன்று சமயநெறி, வளர்ச்சியில் கல்வியியலாளர்கள், அரசியல் வாதிகள், வர்த்தகர்கள் போன்றோரின் கூடுதல் கவனம் ஈர்க்கப்பட்டு வருகின்றது.

சமயம் ஒருவரது பிறப்புரிமை ஒரு பிள்ளையை அதன் வாழ்வில் சமூக நீதியோடு பொருந்தி வாழவைக்கச் செய்யும் பாரிய பொறுப்பு ஆரம்பக்கல்விப் பாடசாலை ஆசிரியர்களிடமேயுண்டு ஆரம்ப வகுப்பில் கற்பிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் ஓர் ஆசிரியர் எல்லாப் பாடங்களிலும் வாண்மை பெற்றிருக்க வேண்டும். சமயம் ஒருவருடைய பிறப்புரிமை என்பதால் அதனை எல்லா ஆசிரியரும் கற்பிக்க முடியும் என்ற தவறான அபிப்பிராயம் சிலரிடமுண்டு. இது பொருத்தமான ஒன்றல்ல.

## சமயக் கல்வியின் பொது நோக்கங்களும், ஆரம்பவகுப்புக் கற்பித்தலில் குறித்தநோக்கங்களும்.

எமது நாட்டு மக்களின் நடத்தைக் கோலங்களில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளிலொன்றாகச் சமயபாடம் அமைந்துள்ளது. இதனை எமது நாட்டில் அமைந்துள்ள பெருந்தொகையான சமய வழிபாட்டுத் தலங்கள் எடுத்துக் காட்டு கின்றன. எமது நாட்டின் 26 (இருபத்தாறு) அரச விடுமுறை தினங்களில் 23 (இருபத்துமூன்று) சமய விழாக்க ளுக்கான விடுமுறைகளாக ஒதுக்கப்பட்டுள்ளமை இதனை மேலும் வலுவூட்டுகின்றது. பாட சாலைகளிலும் மேலாகப் பல்வேறு சமய நிறுவனங்களும், ஒழுங்கமைப்புகளும் தொடர்புகொள் ஊடகங்களும் சமயம் கற்பித்தலில் பங்காளிகளாகச் செயற் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சமயக் கல்வியில் ஆத்மீகக் கொள்கைகளைப் போன்றே லௌகீகக் கொள்கைகளும் உள்ளன. எல்லாச் சமயங்களும் செய்கின்ற முக்கிய சேவை அறநெறி ஒழுக்கங்களை வளர்த்தல் அதனுடன் இணைந்த மக்களின் வாழ்க் கைத்தரத்தை உயர்த்துதல் என்பவை யாகும்.

அத்துடன் பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சமயங்கள் தமது நாட்டின் கலாச்சாரத்தை வளம்படுத்தல் என்பது மேலுமோர் சிறப்பான பொதுச் சேவையாகும். மதங்களினால் மனித குலத்திற்கு வழங்கப்பட்டுள்ள முக்கிய பங்கீடுகளை மதிப்பீடு செய்தலே சமயம் கற்பித்தலின் முக்கிய நோக்கமாகும். மக்களைச் சமயரீதியாகவோ, இனரீதியா கவோ பிரிப்பது அவற்றின் நோக்கமல்ல. எனவே பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் மன எழுச்சியைத் தவ றாகத் தூண்டாத வகையில் சமயத்தைக் கற்பிக்கும் தார்மீக பொறுப்பு சமயபாட ஆசிரியரைச் சார்ந்ததாகும்.

## பாடத்திட்டமும் பாட நூல்களும்.

சைவம், கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம், ஆகிய நான்கு சமயங்கள் எமது நாட்டின் பாடசாலைகளில் கற்பிக் கப்படுகின்றன. இவற்றுக்கிடையே தத்து வார்த்தரீதியில் வேறுபாடுகள் இருப்பினும் பௌதிக நோக்கில் சமானமான தன் மைகள் காணப்படுகின்றன. அதற்கேற்ற வகையிலேயே ஆரம்பக்கல்விப் பாடத் திட்டங்களும், பாடநூல்களும் தயாரிக் கப்பட்டுள்ளன. சமய பாடம் ஏனைய பாடங் களைவிட வித்தியாசமானது இதைக் கற்பிக்கும்போது அறிவு சார்ந்ததும் (அறிவு) எழுச்சி சார்ந்ததும் (மனப்பாங்கு) உளவி யக்கம் சார்ந்ததுமான (திறன்) மூன்று ஆட்சிகளினதும் அனுபவங்கள் ஒருங்கி ணைந்து காணப்படுகின்றன. ஆகவே பாடசாலைகளில் சமய பாடம் கற்பிப்பது ஏனைய பாடங்களைக் கற்பிப்பதிலும் பார்க்கச் சற்றுக் கடினமானது எனலாம். தற்போதைய கல்வித்திட்டத்தில், பாடநூல் களுடன் செயற்பாடுகள், களப்பய ணங்கள் ஆகியவற்றுக்கும் முக்கியத் துவம் வழங்கப்பட்டுள்ளன. இவை யாவும் கற்றல், கற்பித்தலைமேலும் இலகு வாக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.


# மு. விக்னேஸ்வரன்

அதிபர்

யா/ உரும்பிராய் றோ. க. த. க. பாடசாலை.


## சமயம் கற்பித்தல்

சமய பாடநூல் ஒன்றில்லாம லேயே ஆசிரியரால் சமய பாடத்தைக் கற்பிக்க இயலும் என்று திட்டமிட முடி யாது. ஆசிரியருக்குப் பாடநூல் வழிகாட் டியாக அமைந்துள்ளது. பாட நூலின் துணையுடன் ஆசிரியர் தனது செயற்பாடு

களை இலகுவாக்கிக் கொள்ள முடியும். பாடநூலை மையப்படுத்தி ஆசிரியர் வரையறையாகத் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், செயற்படுத்தல் மூலமாகக் கற்பித் தலை வழங்கலாமேயன்றி நேரசூசியின் குறை நிரப்புப்பாடமாக சமயம் கற்பித் தலை ஆக்கிக்கொள்வது பொருத்தமான தல்ல.

ஆரம்ப முதன்மை நிலையொன்றின் சமய பாடப்புத்தகம் வாசிப்பதற்கு அதிகமின்றி சித்திரங்களால் மிகைப்படுத்தப்பட்டதாகும். இங்கே சொற்களஞ்சியங்களை வாசிப்பதற்கு மேலாக படங்களை வாசிப்பதிலேயே பிள்ளைகள் திருப்தியடைவர். இத்திறனை ஆசிரியர்கள் மாணவரிடத்தில் ஏற்படுத்துவது சாலப் பொருத்தமானதாகும். இதன்போது குறித்த படங்களைப் பெரிதாக வரைந்து முழு வகுப்பினரும் பார்க்கக் கூடியவாறு ஒழுங்கமைத்துப் பிள்ளைகளின் அனுபவங்களை வெளிக்கொணரவேண்டும். அதற்கென வினாக்கொத்து ஒன்றையும் தயாரித்துக் கொள்ளவேண்டும். சுமுகமான கலந்துரையாடல், வினாவிடை, பாடல்கள், கவிதைகள் கதைசொல்லல், நடித்துக்காட்டல், படங்கள் வரைதல், சிற்ப ஆக்கங்கள், வெளிக்களச் சுற்றுலா அனுபவங்களைக் கூறுதல். வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்லல் போன்றவற்றைப் பாடத்தின் பொருத்தப்பாட்டிற்கேற்ப பிரயோகிக்கலாம்.

ஆரம்ப முதன்மைநிலை இரண்டிலும், மூன்றிலும் படங்களின் முக்கியத்துவம் குறைக்கப்பட்டு வாசிப்புக்கு முக்கியத்துவமளிக்கப்பட் டுள்ளது. இந்நிலையில் பாடநூலின் கட்டுப்பாடுகளையும் சற்றுமீறி எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்ட நடைமுறை அனுபவங்களைப் பிள்ளைகளுக்கு வழங்கலாம் இந்நிலை எல்லாச் சமய மாணவர்களுக்கும் தத்தமது சமயப் பெரியார்களின் வாழ்க்கை முறை, நோக்கம், என்ற ரீதியில் கதைகளைக் கூறுவதன் மூலம் நோக்கத்தை



நிறை வேற்றலாம். இவ்விடத்தில் கதை இலக்கியமாக மாறக்கூடாது.

**சமயம் கற்பிக்கும் ஆசிரியர்.**

சமயபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களிடம் குறிப்பிட்ட சில தகைமைகளும் குணாம்சங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. அறிவு, பயிற்சி என்பவற்றின் ஊடாகப் பொதுவான பட்டமொன்றைப் பெற்ற ஆசிரியராக இருந்த போதும் சமயம் கற்பிக்கும் ஆசிரியராக ஒழுகுதல் இலகுவாக காரியமல்ல, ஏனெனில் சமயபாடம் வாயிலாக எதிர்பார்க்கப்படுவது பிள்ளையின் மனப்பாங்கு மாற்றமேயாகும். இதனால் தூய்மை, நம்பிக்கை, மனச்சாட்சி, பக்தி. அறநெறி என்பன விருத்தியடையவேண்டும்.

சமயபாடம் கற்பிப்பதற்கு சட்ட ரீதியான சில தகைமையை யுடையவராக ஆசிரியர் இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட சமயம் சார்ந்த ஆசிரியரே அச்சமயத்தைக் கற்பிக்கலாம். என்னும் உரிமை வரையறுக்கப்பட்டுள்ளது. எனவே குறிப்பிட்ட வகுப்பில் பத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் ஒரு சமயத்தைக் கடைப்பிடிப்பவராகவிருந்தால் அவர்களுக்கு சமயம் கற்கும் வசதியை

ஏற்படுத்தும் கட்டாயப் பொறுப்பு பாடசாலையைச் சார்ந்தது.

முதன்மை நிலை ஒன்றில் எல்லாப் பாடங்களையும் கற்பிப்பவர் வகுப்பின் பொறுப்பாசிரியராவார். இவ்வாசிரியர் சமயத்தைக் கற்பிப்பதாயின் அவர் வகுப்பிலுள்ள பிள்ளைகளின் சமயத்தைக் கடைப்பிடிப்பவராக இருக்க வேண்டும். சமயமும் அறநெறியும் வாழ்க்கையின் சகல நடவடிக்கைகளுடனும் தொடர்புடையவையாகும். எனவே சமயத்தையும், அறநெறியையும் கற்பிப்பது பாடவேளையுடன் வரையறுக்கப்பட்ட தொன்றல்ல. ஆரம்பக்கல்வி ஆசிரியர் சகல பாடங்களையும் கற்பிப்பவராதலால் அவருக்கு எப்பாடத்தினூடாகவும் சமயம் கற்பிப்பதற்கு வசதிகள், வாய்ப்புகள் உள்ளன. எனவே ஆரம்ப வகுப்புகளில் சமயபாடம் கற்பித்தல் முக்கியமான தொன்றாகும்.

## அன்பார்ந்த வாசகர்களே,

# "விளக்கு"

**சஞ்சிகையின் சந்தாதாரராகுங்கள்**

**பிரதி ஒன்றின் விலை ரூபா 30/=**

**ஓர் ஆண்டுச் சந்தா ரூபா 360/=**

**(தபாலில் பெற ரூபா 420/=)**

**உங்கள் பெயர் விலாசத்துடன்**




# "விளக்கு"

**தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை,**
**வலயக் கல்விப் பணிமனை,**
**யாழ்ப்பாணம்.**

**என்ற முகவரிக்கு விண்ணப்பியுங்கள்.**






# தரமான உள்ளீடுகள்

# QUALITY INPUTS

தரமான கல்வி உள்ளீடுகள் (Quality Inuts)

இலங்கை அரசாங்கம் உலக வங்கியின் அனுசரணையுடன் பாடசாலைகளின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் பொதுக்கல்வித்திட்டம் II (General Education Project - II) ஐ நடைமுறைப்படுத்தி வருகின்றது.

**இத்திட்டத்தில் பின்வரும் விடயங்கள் இடம்பெறுகின்றன.**

1. பாடசாலை மீள்வியூகம் School Rationalization
02. பாடவிதானம் Curriculam
03. பாடநூல் வெளியீடு Publication of text book
04. தரமான உள்ளீடுகள் Quality Inputs
05. நூலகம் Library
06. முகாமைத்துவம் Management
07. கற்றல் Studies
08. நிதி Finance

இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் கல்விக்கான ஒதுக்கீடு தேசிய வருமானத்தில் மிகச் சிறுபகுதியாகவே உள்ளது. இதில் பெரும் பகுதி ஆளணியினர் சம்பளமாகவும், சிறுபகுதி பௌதிக வளங்களைப் பெற்றுக் கொடுக்கவும், மிகச்சிறு தொகையே (0.02%) கல்வித்தர மேம்பாட்டுக்காகவும் செலவு செய்யப்பட்டது. இந்நிதியம் நாட்டின் சகல பாடசாலைகளுக்கும், சகல மாணவர்களுக்கும் சமமாகச் சென்றடையவில்லை. எனவே நாட்டிலுள்ள சகல மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சமமான சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுக்கும் முறையில் ஆரம்பிக்கப்பட்ட திட்டமே பொதுக்கல்வித் திட்டமாகும்.

G.E.P.II ன் ஒரு அம்சமான தரமான உள்ளீடுகள் என்ற விடயம் பற்றியே இக்கட்டுரையில் ஆராயப்படவுள்ளது.

**தரமான உள்ளீடுகள் என்றால் என்ன?**

பாடசாலை அமைப்பில் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டிற்கு அவசியமான சகல விடயங்களும் தரமான உள்ளீடுகள் எனலாம்.

**தரமான உள்ளீடுகள் அடங்கும் விடயங்களை நான்கு விதமாக நோக்கலாம்.**

01. மாணவர் கல்வி பயிலும் முறையில்/ ஆசிரியர் கல்வி கற்பிக்கும் முறையில் கல்வியின் தரத்தைமேம்படுத்துவதற்காக நுகரப்படும் எல்லாவிதமான பொருட்களும்.

02. மாணவர்களினாலும், ஆசிரியர்களாலும் பாவிக்கப்படும் மூலதனச் சொத்துக்கள்.

03. அவ்வகையான மூலதனச் சொத்துக்களை திருத்துவதற்கும், பேணுவதற்குமான செலவினங்கள்.

04. வெளியிலிருந்து பெறப்படும் நிபுணத்துவ ஆலோசனைகளுக்கு உள்ளாகும் செலவினங்கள் (நிதி பெறுவதற்கு மாற்று வழிகள் இல்லாவிடத்து மாத்திரம்)

**தரமான உள்ளீட்டின் நோக்கம் என்ன?**

01. வகுப்பறைக்கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கினைத் தரமுள்ளதாக்குவதற்கான வளங்களைச் சகல பாடசாலைகளுக்கும் பெற்றுக்கொடுப்பது.

02. நாட்டிலுள்ள சகல பாடசாலைகளிலும் உள்ள சகல மாணவர்களுக்கும் சகல ஆசிரியர்களுக்கும் வளங்கள் சமமாகப் பங்கிடப்படுவதை உறுதிப்படுத்துதல் என்பனவாகும்.

இவற்றை நிறைவேற்றிக்கொள்ளத் தரமான உள்ளீடுகள் எந்த அடிப்படையில் பங்கீடு செய்யப்படுகிறது. என்பதை நோக்குவோம்.

இதுவரை காலமும் பாடசாலைக்குப் பொருட்கள் வழங்கப்படும் முறையில் பல குறைபாடுகள் காணப்பட்டன. அவ்வாறு வழங்கப்பட்ட பொருட்களின் தரம் பற்றியும் திருப்தியற்ற நிலையே நிலவிவந்துள்ளது. எனவே பொதுக்கல்வித் திட்டம் - II ல் தரமான உள்ளீடுகள், வளங்கள் என்பன நியாய மாகவும் பாகுபாடற்ற முறையிலும் பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கில் நிதிப்பகுதியை அறிமுகம் செய்யும் தொழிற்பாடு நிதி ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் நியமம் சார்ந்த, அலகு, விலை, வளப்பகிர்வு பொறிநுட்பம் (Norm Based Unit Cost Resource Allocation Mechanism - NBUCRAM) என்னும் வாய்ப்பாடு முன் வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் பாடசாலைகளில் நிதி செலவிடப்படும்போது ஆரம்பப் பிரிவு மாணவர்களை விட கூடுதலான நிதி உயர்வகுப்பு மாணவர்களுக்கே செலவிடப்பட்டது. அத்துடன் கூடுதலான நிதி பெரிய பாடசாலைகளையே சென்றடைந்தது. சிறிய பாடசாலைகளும், பின்தங்கிய பாடசாலைகளும் எந்தவளமுமின்றிக் கைவிடப்பட்டன.

எனவே சகல பாடசாலைகளுக்கும் நிதி பாரபட்சமற்ற முறையில் பங்கிடப்படுவதற்கும் சகல பிரிவு மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சமமாகப் பயன்படுவதை உறுதிப்படுத்தவும்,

Norm Based
Unit Cost
Resource Allocation

என்னும் அம்சங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் பாடசாலைகள் ஏழாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. (1-5, 1-9, 1-11, 1-13 A/C, 1-13 Sc, 6-13 A/C, 6-13 Sc).

மாணவர் குழுக்களும் ஏழாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. (1-100, 101-300, 301- 500, 501-750, 751 - 1000, 1001-1500, 1501-2000, 2000 மேல்) இவை தவிர பின்தங்கிய பாடசாலைகளும் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு பாடசாலை வகைகளுக்கும், மாணவர்களுக்குமேற்ப நிதி பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

**தரமான உள்ளீடுகளுக்கான நிதி மூன்று விதமாகப் பகிர்ந்தளிக்கப்படுகின்றது.**

01. மீண்டுவரும் செலவினம் (Recurrent)

02. மூலதனச் செலவினம் (Capital)

03. பராமரிப்புச் செலவினம் (Maintenance & Repair)

பாடசாலை அதிபர்கள் தரமான உள்ளீடுகள் தொடர்பாக நடைமுறைப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். தரமான உள்ளீடுகளின் பகிர்வு, விடயத்திலும், தரமான உள்ளீடுகள் தொடர்பாக பாடசாலைகள் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் விடயத்திலும், பேணப்படவேண்டிய ஆவணங்கள் பற்றிய விளக்கம் போதுமானதாக இல்லை. எனவே இவ்விடயங்கள் பற்றி, சுற்றுநிருபத்தில் அடங்கியுள்ள விடயங்களுக்கும் மேலாக அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், ஆர்வலர்கள் என்போர் போதிய விளக்கத்தினைப் பெறும் நோக்குடன் அனுபவரீதியான அறிவைக்கொண்டு இவ்வாக்கம் எழுதப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்கும் திருமதி சரோஜினி வேதநாயகம் அவர்கள், அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் நீண்ட காலங்கள் உதவிக் கல்விப்பணிப்பாளராக பணியாற்றியவர். இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரியான இவர் தற்பொழுது யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் உதவிக்கல்விப்பணிப்பாளராகக் கடையாற்றுகிறார்.

கல்விக்கான மொத்தவரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் மீண்டு வரும் செலவின நிதியிலிருந்து 2% தரமான உள்ளீடுகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. இதில் 40% நுகர்பொருட்கள் கொள்வனவிற்காகவும் 60% மூலதனப் பொருள் கொள்வனவிற்காகவும் செலவிடப்படும்.

முழுவதுமான கல்விக்கான மூலதன நிதி ஒதுக்கீட்டில் 35% மூலதன உள்ளீடுகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. இவ் 35% ல் 29% தரமான மூலதன உள்ளீட்டுக் கொள்வனவிற்கும் 10% மூலதன உள்ளீட்டுப் பொருட்களைப் பராமரிப்பதற்கும், திருத்துவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

மேலே கூறப்பட்ட ஒதுக்கீடுகளில் 95% நாட்டிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் NBUCRAM அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படும். மீதி 5% பின்தங்கிய பாடசாலைகளுக்கு மேலதிகமாக வழங்கப்படும். NBUCRAM மூலம் நிதி பங்கிடப்படும்போது பின்தங்கிய பாடசாலைகளும், சிறிய பாடசாலைகளும், மாணவர் குழு அடிப்படையில் ஆரம்பப்பிரிவு மாணவர்களும் கருத்தில் எடுக்கப்பட்டுள்ளமை கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயமாகும்.

### தரமான உள்ளீடுகள் கொள்வனவு எவ்வெவ் மட்டங்களில் மேற்கொள்ளப் படுகின்றன?

01. பாடசாலை மட்டம்
02. வலயக்கல்வி அலுவலக மட்டம்
03. மாகாண கல்வித்திணைக்கள/அமைச்சு மட்டம்
04. கல்வி அமைச்சு மட்டம்

தரமான கல்வி உள்ளீடுகள் பெறுதல்/வழங்குதல் தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றி நிதியாணைக்குழுவினால் 2000ல் வெளியிடப்பட்டதான 2003/13 சுற்றுநிருப இலக்கம் கொண்டதுமான தரமான கல்வி உள்ளீடுகள் எனும் கைந்நூல் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அத்துடன் திருத்திய பதிப்பு டிசம்பர் 2002ம் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

### தரமான உள்ளீடுகள் தொடர்பாக பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் எவை?

01. பாடசாலைகள் தரமான உள்ளீடுகள் தொடர்பாக "........................ பாடசாலை தரமான உள்ளீட்டு வங்கிக்கணக்கு" என்ற பெயரில் தனியான வங்கி நடைமுறைக் கணக்கொன்றை திறத்தல் வேண்டும். அதிபருடன் உப அதிபர்/சிரேஷ்ட உதவி

ஆசிரியர் ஒருவர், (இருவரும்) இந்த வங்கிக் கணக்கை செயற்படுத்த வேண்டும். வங்கிக் கணக்கு திறக்கப்பட்டமை பற்றி அதிபர் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறியத்தர வேண்டும்.

02. தரமான உள்ளீடுகள் கொள்வன விற்காக பாடசாலைக்கு ஒதுக்கப்பட்ட பணம் தொடர்பான கடிதம் (பின்னிணைப்பு - 16) அலுவலகங்களிலிருந்து பாடசாலைக்குக் கிடைத்ததும் தரமான உள்ளீடுகளுக்கு மாத்திரம் பயன்படும் C - 100 இலக்கப் பற்றுச்சீட்டுப் புத்தகத்திலிருந்து பற்றுச்சீட்டைக் கையளித்து தமக்குரிய காசோலையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

03. காசோலை தரமான உள்ளீட்டு வங்கிக்கணக்கில் வைப்புச் செய்யப்பட வேண்டும்.

04. அதிபர், தரமான உள்ளீடுகள் தொடர்பாக ஆசிரியர் கூட்டத்தில் பூரண விளக்கமளித்து ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விபரங்களை பிரிவு ரீதியாக அறியத் தருவதுடன் (1-5,6-9, 10-11, 12-13 A/C, 12-13 Sc) விளம்பரப்பலகையில் விளம்பரப் படுத்தவும் வேண்டும். பாடசாலை அபிவிருத்திச் சபைக்கூட்டத்தில் பெற்றோருக்கும் இது தொடர்பாகப் பிரஸ்தாபிக்க வேண்டும்.

05. ஆசிரியர் கூட்டத்தில் பாடசாலைக் கொள்வனவுக்குழு (SPC) பாடசாலை மதிப்பீட்டுக்குழு (SEC) என்பன தெரிவு செய்யப்பட்டு அவை பற்றி இரு பிரதிகள் தயாரிக்கப்பட வேண்டும். அவை வலயக் கல்விப்பணிப்பாளரின் அங்கீகாரம் பெறப்பட அவருக்குச் சமர்ப்பிக்கவேண்டும். ஒரு பிரதி காரியாலயத்தில் கையளிக்கப்பட வேண்டும்.

06. தரமான உள்ளீடுகள் தேவைகள் தொடர்பாக ஆசிரியர் கூட்டத்தில் விளக்கமளிக்கப்பட்டு வருட ஆரம்பத்தில் பாட ரீதியாக, வகுப்புரீதியாக, தரமான உள்ளீடுகளின் தேவைப்பட்டியல். பெறப் (பின்னிணைப்பு 08) படவேண்டும்.

07. தேவைப்பட்டியல் மதிப்பீட்டுக் குழுவிடம் கையளிக்கப்பட்டு முன்னுரிமைப்பட்டியல் (பின்னிணைப்பு 09) தயாரிக்கப்பட வேண்டும்

08. கொள்வனவு

பாடசாலையின் வருடாந்த தேவைகள் களஞ்சியவசதி, நிதி, என்பவற்றைக் கருத்திற்கொண்டு ஒரே முறை யில் கொள்வனவு செய்வதா, தவணைமுறையில் செய்வதா எனத் தீர்மானித்தல் வேண்டும். பதிவு செய்ப்பட்ட வழங்குனர்களிடமிருந்து கூறுவிலை கோரப்பட வேண்டும். பதிவு செய்யப்பட்ட வழங்குனர் இல்லாதவிடத்து பாடசாலைக் கொள்வனவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுக், குறைந்தது 03 வழங்குனர்களிடமிருந்து கூறுவிலை (பின்னிணைப்பு 03) கோரப்படவேண்டும்.

09. கூறுவிலைகள் அதிபரால் அல்லது பிரதி அதிபரால் கோரப்பட்டுப் பெறப்பட்டு அவை கடைசித்திகதியும் நேரமும் கடந்த பின் பாடசாலை மதிப்பீட்டுக்குழு அங்கத்தவர் ஒருவரின் முன்னிலையில் திறக்கப்படவேண்டும்.

10. மதிப்பீட்டுக்குழு கூறுவிலை அட்டவணையில் உள்ள கூறுவிலைகளைப் பரிசீலனை செய்து ஆகக்குறைந்த/ பொருத்தமான கூறுவிலையைச் சிபார்சு செய்யவேண்டும். சிபார்சு அறிக்கையில் எல்லா அங்கத்தவர்களும் கையொப்பமிட வேண்டும்.

11. மதிப்பீட்டுக்குழுவின் சிபார்சின் அடிப்படையில் கொள்வனவு பற்றிய தீர்மானத்தை எடுக்க வேண்டும். அவ்வறிக்கையில் பாடசாலைக் கொள்வனவுக்குழு அங்கத்தவர்கள் அனைவரும் கையொப்பமிட வேண்டும்.

12. இதனடிப்படையில் கொள்வனவுக் கட்டளை (பின்னிணைப்பு 04) தயாரிக் கப்பட்டு வழங்குனர்களிடம் கொடுத்து பொருட்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும் கொள்வனவுக்கட்டளைப்பிரதி வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

13. பெற்றுக்கொள்ளப்பட்ட பொருட்கள் அனுமதிக்கப்பட்ட வகையையும், தரத் தையும் ஒத்தது. என பாடசாலை மதிப்பீட்டுக்குழு தரச்சான்றிதழ் வழங்க வேண்டும். பினனர் தரமான நுகர்வு உள்ளீ டுகள் வைப்புப் புத்தகத்தின் வரவுப்பக் கத்தில் (பின்னிணைப்பு 06) அவை, பதிவு செய்யப்பட்டு பாடசாலைக் கொள்வனவுக் குழுவால் இருப்பு சான்றிதழ் வழங்கப்பட வேண்டும். கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் பட்டியல் விளம்பரப்பல கையில் விளம்பரப்படுத்தப்பட வேண்டும்.

14. நன்கொடையாகக் கிடைத்த தர மான உள்ளீடுகளுக்கும் மேற்சொன்ன நடைமுறை பின்பற்றப்படவேண்டும்.

15. கற்றல், கற்பித்தல், நோக்கத் திற்காகதரமான நுகர்வு உள்ளீடுகள் வழங்கப்படும்போது பகிர்வு பக்கத்தில் (பின்னிணைப்பு 05) பதிவு செய்யப்படல் வேண்டும்.

16. சிறு திருத்தம், உபகரணத் திருத்தம் என்பன செய்யப்படும் சந்தர்ப் பத்தில் திருத்த வேலை திருப்திகரமானது என பாடசாலை மதிப்பீட்டுக்குழு தரச் சான்றிதழ் வழங்கிய பின்பே கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

17. கொடுப்பனவுகள் யாவும் பொது- 35, வவுச்சர் மூலம் செய்யப்படவேண்டும். பாடசாலை மதிப்பீட்டுக்குழுத் தலைவரால் சிபார்சு செய்யப்பட்டு அதிபரால் அனுமதிக் கப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

18. தரமான உள்ளீடுகள் தொடர்பான நிதி நடைமுறைகள் அனைத்தும் தரமான உள்ளீடுகள் காசேட்டில் பதியப்பட வேண்டும். ஒவ்வொரு 04 மாத முடிவிலும் 4 மாதக்கணக்கறிக்கை இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு ஒரு பிரதி வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

19. வலயக்கல்வி அலுவலகம், மாகா ணக்கல்வி அமைச்சு, கல்வி அமைச்சு ஆகியவற்றினால் தரமான உள்ளீடுகள் வழங்கப்படும் சந்தர்ப்பங்களில் பொருள் வழங்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து (பொது141) பொருள் வழங்கும் கட்டளை யைப் பெற்றுக்கொண்டு, அதிபர் (பொது 219) பற்றுக் கட்டளையை இரண்டு பிரதிகள் தயாரித்து ஒரு பிரதியை வழங்க வேண்டும். பெற்றுக்கொண்ட பொருட்கள் அனைத்தும் பொருட்பதிவேட்டுப் புத்த கத்தில் பகுதிரீதியாக, பாடரீதியாக ஒழுங் காகப் பதியப்பட வேண்டும்.

20. தரமான உள்ளீடுகளின் எல்லா வித நட்டங்களும், சேதங்களும் வலயக் கல்விப்பணிப்பாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படுவதுடன் சம்பவத்திரட்டுப் புத்தகத்திலும் பதிவு செய்யப்படல் வேண்டும்.

**தரமான உள்ளீடுகள் தொடர்பாக பாடசாலை களில் பேணப்படவேண்டிய ஆவணங்களும் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களும் எவை?**

01. *தரமான உள்ளீடுகள் - கோவை இல, 01*

1. காரியாலயத்தினால் வழங்கப்பட்ட கைந்நூல், கடிதங்கள்
2. வங்கிக் கணக்கு திறத்தல் தொடர்பான கடிதங்கள்

- சரோஜினி வேதநாயகம் -
SLEAS - II

3. பாடசாலைக் கொள்வனவுக்குழு, மதிப்பீட்டுக்குழு, வலயக்கல்விப் பணிப்பாளரினால் அனுமதிக்கப்பட்ட கடிதம்.

### *1.2 கொள்வனவுக் கோவைகள் இல. 02*

**கோவை இல — 2.1 கொள்வனவுப் பட்டியல்**

1. வகுப்புரீதியாக, பாடரீதியாக தரமான நுகர்வு உள்ளீட்டுப் பொருட்களின் பட்டியல் (காரியால யத்தால் வழங்கப்பட்டவை)
2. பாடரீதியாக, வகுப்பு ரீதியாக தயாரிக்கப்பட்ட தரமான நுகர்வு உள்ளீடுகள் தேவைப்பட்டியல் (பின்னிணைப்பு 08)
3. முதன்மைப்பட்டியல் (பின்னிணைப்பு 09)

**கோவை இல. 2.2 கூறுவிலை கோரல்.**

1. கூறுவிலை கோரும் கடிதம்.
2. கூறுவிலைகள் (பெறப்பட்டகடிதம்)
3. கூறுவிலை அட்டவணை
4. மதிப்பீட்டுக்குழுவின் சிபார்சுக்கடிதம்
5. கொள்வனவுக்கட்டளை (பின்னிணைப்பு 04)

**கோவை இல. 2.3 a.நுகர்பொருட் கொள் வனவு கொடுப்பனவுகள்**

1. வழங்குனரிடமிருந்து பெறப்பட்ட கொள்வனவுக்கட்டளை (பின்னிணைப்பு 04)
2. கொடுப்பனவு வவுச்சர் (பொது - 35)
3. பற்றுச்சீட்டுக்கள்
4. பாடசாலை மதிப்பீட்டுக்குழு தரச் சான்றிதழ்
5. பாடசாலைக் கொள்வனவுக்குழு இருப்புச் சான்றிதழ்

**கோவை இல 2.3 b சிறுதிருத்தக் கொடுப் பனவுகள்**

1. கொடுப்பனவு வவுச்சர்
2. வேலை அளவுத்தாள்
3. பாடசாலை மதிப்பீட்டுக்குழு தரச்சான்றிதழ்

***02.* *பாடசாலைக் கொள்வனவுக்குழு கூட்டறிக்கைப் புத்தகம்***

***03.* *பாடசாலை மதிப்பீட்டுக்குழு அறிக்கைப் புத்தகம்***

***04.* *தரமான உள்ளீடுகள் காசேடு***

**கோவை இல. 4.1 காசேட்டுக்கோவை**

1. சீ - 100 புத்தகம்
2. காசோலைப் புத்தகம்
3. காசோலை வங்கியிலிட்ட பற்றுச்சீட்டு
4. நிதி ஒதுக்கீடு தொடர்பாக காரியாலயத்திலிருந்து அனுப்பப்பட்ட கடிதம்
5. வங்கிக் கணக்குக் கூற்று
6. 4 மாதக்கணக்கறிக்கைப் பிரதி

***05.* *தரமான நுகர்வு உள்ளீடு கையிருப்புப் புத்தகம்***
(பின்னிணைப்பு 06, 05)

***06.* *தரமான மூலதன உள்ளீடுகள் பொருட்பதிவேட்டுப் புத்தகம் பொது - 14***

**கோவை இல. 6.1**

1. பொருள் வழங்கற் கட்டளை பொது - 141
2. பற்றுக்கட்டளை பொது - 219
3. பாடசாலை மதிப்பீட்டக்குழு தரச்சான்றிதழ்

4. பாடசாலை கொள்வனவுக்குழு இருப்புச்சான்றிதழ்

5. தரமான மூலதன உள்ளீடுகள் நட்டம், இழப்பு தொடர்பான கடிதப்பிரதி

***07. கோவை இல. 7 நன்கொடைப் பற்றுச்சீட்டு***
நன்கொடையாகக் கிடைத்த தரமான உள்ளீடுகள், நிதி தொடர்பான விபரங்கள் கோவையில் இடப்படவேண்டும்.

***08. கோவை இல. 8 பதிவு செய்யப்பட வழங்குநர் பட்டியல்***

***09. பொருள் பகிர்வுப்புத்தகம்***
கற்றல் கற்பித்தல் தொடர்பாக ஆசிரியர்களுக்கு மூலதன தர உள்ளீடுகள் வழங்கப்படும்போது பதிவு செய்யப்படல் வேண்டும்.

***10.*** அ. வகுப்புரீதியாக தரமான உள்ளீடுகள்
பயன்படுத்தப்பட்டமைக்காக பதிவுப்புத்தகம் பேணப்பட வேண்டும்.

***ஆ. மேற்பார்வை அறிக்கைப் பதிவுப்புத்தகம்.***

**தரமான உள்ளீடுகள் உரிய பயனைத் தந்துள்ளனவா? என அறியமேற்பார்வை வேலைத்திட்டம் ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. அது நான்கு மட்டங்களில் இடம்பெறும்.**

1. **பாடசாலை மட்டம் - அதிபர்** தவணைமுடிவில் வலயக்கல்விப் பணிப்பாளருக்கு மேற்பார்வை அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2. **வலயமட்டம் -** வலயக்கல்விப்பணிப்பாளர், பிரதிக் கல்விப்பணிப்பாளர், பாடரீதியான உதவிக்கல்விப்பணிப்பாளர்,



சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், கணக்காளர், ஆகியோரால் மேற்பார்வை செய்யப்படும். படிவம் M - 1, M - 2.

3. **மாகாண மட்டம்** - படிவம் M - 3

4. **தேசிய மட்டம்** - படிவம்

இதுவரை காலமும் நடைமுறையிலிருந்த பொருள் வழங்கல் முறையிலிருந்து முதற்தடவையாக அதிபர்களிடம் இப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் குணநல உள்ளீடுகள் வழங்கப்பட்ட முறை, அதன் தரம், உரிய நேரத்திற்குக்கிடைக்காமை என்பன பற்றி கடும் விமர்சனங்கள் எழுந்தன. ஆசிரியர்களும் தமது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு தரமான உள்ளீடுகள் பற்றாக்குறை, பெரும் தடையாக இருந்தமையை உணர்ந்திருந்தனர். G.E.P. IIன் கீழ் தரமான உள்ளீடுகள் பெறப்படுகின்றமையானது இன்று எமக்குக் கிடைத்த அரிய வாய்ப்பாகும். இதை உணர்ந்து கல்வித் துறை சார்ந்த சகல தரப்பினரும் தமது கவனத்தைச் செலுத்துவதுடன் இதன் முழுப்பயனும் கிடைக்கத் தம்மாலான முழுமுயற்சிகளையும் அர்ப்பணிப்புடன் ஆற்றுவது எமது மாணவ சமுதாயத்திற்கு நாம் ஆற்றும் பெரும்பணியாகும்.

*சிறுகதை*

# அவனை விட்டுவிடுங்கள்

அதிகாலை ஐந்துமணி இருக்கும் அக்கம் பக்கத்துக் கோயில் மணிகள் ஒலித்து ஓய்ந்துவிட்டன.

மகன் படிக்கிறானா என்று பார்ப்பதற்கு மணியம் படுக்கையை விட்டு எழுந்து செல்கிறார்.

"சோதனைக்கு இன்னும் எத்தனை நாட்களடா இருக்கு" "எருமை எழும்பிப் படியன்" என்று கூறியவாறு அவன் பக்கம் சென்று ஆத்திரத்தில் கும்.. கும்.. என இரண்டு குத்தல்.

மேசையில் அயர்த்துப்போய் கிடந்த சுதன் திடுக்கிட்டு "ஐயோ ஐயோ என்ரை அம்மா" எனக் கத்த....

மணியத்தின் ஆத்திரம் அடங்கி படுக்கையில் போய் அமர்கிறார்.

''மூதேசி என்ன செய்தாலும் படியாதாம்" "சோதனை நாளைக்கு. இது மாடு மாதிரி தூங்குது" என்று சொல்லிய வாறு படுக்கையில் சரிகிறார்.

மகனின் அவலக்குரல் கேட்டதாய் ராணி, தகப்பன் கொடுத்த குத்தைத் தாங்கமுடியாது அந்தரப்படும் மகனைப் பார்த்து அவஸ்தைப்படுகிறாள்.

சுதன் முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டு விக்கிவிக்கி அழுகிறான். மேசையில் இருந்த மாணவர் பௌதீகப்புத்தகம் கண்ணீரால் நனைந்து கிடக்கிறது.

கும்பத்தை நெளித்து, வளைத்து நோ தாங்க முடியாது சுதன் அழுவதைப் பார்க்க தாயால் சகிக்க முடியவில்லை.

"இதுவும் ஒரு செயலே, நித்திரைக் கேட்டில் பிள்ளைக்கு அடிக்கிறதோ" தன் ஆற்றாமையை அவள் வெளிப்படுத்தி சுதனை அணைக்கச் சென்றாள்.

"கிட்டவராதே. போ...போ..."

"அழாதே ராசா, ஆத்திரத்தில் அப்பா அடித்துப் போட்டார்"

''அதுக்கு காலங்காத்தால இப்பிடியே..." அழுதழுது அவன் கூற

"சரி..சரி.." என சமாதானப்படுத்தினாள் தாய்.

அடுத்த அறையில் மணியம் தான் அடித்ததை எண்ணி வெந்து கொண்டார். என்னைப் போல இவன் பௌதீக பாடத்தை விரும்பி விளங்கி படிக்கிறான். இல்லையே எண்ட கவலை அவருக்கு. பெருமூச்சுடன் "இவனுக்கு படிப்பு வராது, மாடு இது எங்க பாஸ் பண்ணப்போகுது கோட்டவிட்டுட்டு நிக்கப்போகுது....." அவரின் ஆத்திரம் மகனின் படிப்பில் தான் குவிந்து கிடக்கிறது. தகப்பனுக்கு அவன் பயம், ஆனாலும் ஆத்திரம், வெட்கம், கவலை, வாலிபத்துடிப்பு யாவும் அவன் மனதில் எழுகின்றன. உணர்வுகள் மோதுகின்றன. தலையைத் தூக்குகின்றான். தொப்பென மேசைமேல் இடிக்கிறான்.

க. கந்தசாமி

ஏ.எல். விஞ்ஞானம் படிக்க ஏன் வந்தேன்? என்றிருக்கிறது.'ஒண்டுமே விளங்குதில்லை... அப்பாட்ட சொன்னாலும் கேட்கிறார் இல்ல' அவனது மனம் சலித்துக் கொண்டது. மீண்டும் தலையில் இடிக்கிறான்.

ஆத்திரத்தில் கால்களை வேறு நிலத்தில் அடிக்கிறான். அர்த்தம் இல்லாத சப்தங்கள் அவன் வாயில் இருந்து வெளிவந்தன.

தாய் சத்தம் கேட்டு அறைக்குள் வந்தாள். ''ஏன் அப்பன்... இப்பிடிச் செய்யிறாய்...... என்ர ராசா... அப்பா இனி அடிக்க மாட்டார் நான் பாக்கிறன், நீ...படி..'' அவள் அவன் தலையை வருடி அணைக்க முயல்கிறாள்.

''எனக்கு வேணாம்... இந்த விஞ்ஞானமும் வேணாம்.. மண்ணாங் கட்டியும் வேணாம் என்ன...விடுங்கோ...''

அவன் பெரும் சத்தமாகக் கத்துகிறான். சத்தம் கேட்டு அறைக்குள் அவசரமாக நுழைந்தார் மணியம். புத்தகத்தைத் தூக்கி எறிந்த சுதனின் கண்கள் இரண்டும் ஆந்தை முழிகள் போலாகுகின்றன. கை, கால்கள் பதறுகின்றன. தொப்பென நிலத்திலே மயங்கி விழுகிறான். மண்டை மேசையில் அடிபடுகிறது. தகப்பானாலும் தாயாலும் அவனைக் கட்டுப்படுத்த முடியவில்லை. மயக்கம் தெளிந்த சுதன் கையால் பல சைகைகளைக் காட்டுகிறான். எழுந்து அறையில் அங்குமிங்கும் அலைகிறான். முகம் விகாரமடைந்து காணப்படுகிறது.

''எனக்கு விஞ்ஞானம் வேண்டாம்... எனக்கு விஞ்ஞானம் வேண்டாம்'' அடிக்கடி சுதன் சொல்லிக்கொள்ளும் வார்த்தைகளாக இது மாறிவிட்டது.

''ஸ்கொலஷிப் பாஸ் பண்ணின போதும், 'ஓ. எல்' லில் ஐந்து 'டி' எடுத்த போதும் அவனுக்கு கலைத்துறையில் இருந்த ஈடுபாடு அதிகம். அதையும் மீறி விஞ் ஞானம் படிக்கச் சொல்லிக் கட்டாயப் படுத்தினபோது அவன் ஒப்புக்கொண்டது, உண்மைதான். ஆனால் இன்று... பரீட்சை மண்டபங்களில் மாணவர்கள் தோன்றி விடை எழுதும்போது, இவன் மட்டும் வீட்டுச் சுவரில் ஏதேதோ கிறுக்கிக் கொண்டிருந்தான்.

*சிறந்த நிர்வாகியும், கல்வியுலகம் நன்கறிந்த கல்வியியலாளரும், ஓய்வுபெற்ற மாகாணக்கல்விப் பணிப்பாளரும் தற்பொழுது ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டுழைப்பகத்தின் கல்விச் செயற்றிட்ட அதிகாரியாக கடமையாற்றுபவருமான திரு. க. கந்தசாமி அவர்கள். உளவியல் சார்ந்த சிந்தனையும், செயலூக்கம் கொண்ட விவேகியுமாவார். அவரது "அவனை விட்டுவிடுங்கள்" என்னும் சிறு கதை இவ்விதழில் பிரசுர மாகின்றது.*

*மாணவர்களின் கல்வியில் கருத்துடன் பணி தொடரும் ஆசிரியர்களின் நன்மைகருதி இச் சிறுகதையை மகிழ்வுடன் வெளியிடுகின்றோம்.*



# மெய்யறியக் கேளுங்கள்?

**கேள்வி:** திரு.இ.செல்வகுமார்
ஆசிரியர்
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்

2003ம் வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதிக்குப் பின்னான காலத்தில் நியமனம் பெற்ற புதிய ஆசிரியர்களுக் கான ஓய்வூதியத் திட்டத்தில் மாற்றம் செய்யப் பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. அது பற்றிய விபரத்தைத் தெரியத் தருவீர களா?

**பதில்:** திரு. கே. ஆர். துரைசிங்கம்
கணக்காளர்,
யாழ்ப்பாணம் கல்விவலயம்.

புதிய ஆசிரியர்களுக்கு மாத்திர மல்ல; 01-01-2003ம் திகதியிலிருந்து அரச திணைக்களில் நிரந்தர நியமனம் பெறும் சகல உத்தியோகத்தர்களுக்கும் இப்புதிய ஓய்வூதியத் திட்டத்தின் மூலம் மாதாந்த ஓய்வூதியம் பெறும் வேளையில் ஓய்வூதிய நிதி வழங்கப்படவுள்ளது.

செயலாளர், பொதுத்திறைசேரி, முகாமைத்துவ சேவைகள் திணைக்க ளத்தின் டி.எம். எஸ்/சி.எம்/ ஜென் இலக் கம் கொண்ட 2003-01-05-ம் திகதிய 18ம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 2003-01-01ம் திகதியில் இருந்து அரச திணைக்கள கங்களில் நிரந்தரநியமனம் பெறும் சகல உத்தியோகத்தர்களும், ஓய்வூதிய நிதியத் துக்குப் பங்களிப்புச் செய்ய உரித்துடை யோராவர்.

ஓய்வூதிய நிதியத்திற்கு உத்தி யோகத்தரின் பங்களிப்பாக அவரின் மாத வேதனத்திலிருந்து 8% பணமும், அவர் கடமையாற்றும் திணைக்களத்திலிருந்து 12% பணமுமாக மொத்தம் அவரது மாத வேதனத்தின் 20% மான பணம் நிதியத் திற்குச் செலுத்தப்படும்.

2003-01-01 லிருந்து நிரந்தர நியமனம் பெற்ற சகல உத்தியோகத்தர் களும் தத்தமது ஓய்வூதியப் பங்களிப்பு இலக்கத்தைப் பெற பின்வரும் சான்றிதழ் களைத் திணைக்களத்தலைவரின் ஊடாக மத்திய வங்கிக்கு அனுப்புதல் வேண்டும்.

1. குறிப்பிட்ட பதவியை நிரப்புவ தற்காக பொதுதிறைசேரியிடமிருந்து பெறப்பட்ட அனுமதிக் கடிதப்பிரதி (திணைக்களத் தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.)
2. முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 18 உடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் 1 இல் பகுதி - அ,
3. முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 18 உடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் 1 இல் பகுதி - ஆ

4. உத்தியோகத்தரின் தேசிய அடையாள அட்டையின் உறுதி செய்யப்பட்ட பிரதி

5. உத்தியோகத்தரின் நியமனக்கடிதத்தின் உறுதிசெய்யப்பட்ட பிரதி

6. உத்தியோகத்தரின் பிறப்பு சான்றிதழின் உறுதிசெய்யப்பட்ட பிரதி

7. உத்தியோகத்தர் விவாகம் செய்தவராயின் விவாக சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதி

8. முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல 18 (1) உடன் இணைக்கப்பட்டுள்ள அங்கத்தவர் தகவற் படிவம்.

இத் திட்டத்தில் இருந்து ஓய்வு பெறும் உத்தியோகத்தர்களுக்கு அவர்களால் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட்ட 20% தொகைப்பணமும் அதற்குரிய வட்டியும் சேர்த்து மொத்தமாக வழங்கப்படும். மாதாந்த ஓய்வூதியம் எதுவும் வழங்கப்படமாட்டாது.



## ஆசிரிய வாண்மை – ஒரு நோக்கு

திரு. செல்லத்துரை சேதுராஜா அவர்களால் எழுதப்படுகின்ற ஆசிரிய வாண்மை - ஒரு நோக்கு எனும் கட்டுரைத்தொடர் தவிர்க்கமுடியாத காரணங்களால் இவ்விதழில் பிரசுரமாகவில்லை **"விளக்கு"** சஞ்சிகையின் பெப்ரவரி 2004 இதழில் அத்தொடரின் நான்காவது பகுதியை எதிர்பாருங்கள்.

"இதழாசிரியர்"

# விளக்கின் ஒளியில் விரைவோம்

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே....". என்ற வாசகம் அட்டையை அலங்கரிக்க 2003 டிசம்பர் மாத "விளக்கு" சஞ்சிகை சிறப்பான பல கட்டுரைகள், கவிதைகள். சிறுகதைகள், அனுபவத்தொடர் என்பவைகளை ஒளியாகக் கொண்டு வெளிவந்துள்ளது.

தமிழீழக் கவிராயரின் "ஆசிரியர் வேதம் வளர்க" எனும் கவிதை விளக்கினில் ஒளிவிடும் விவேக அலைகளாக மோதுகின்றது. "உமாபாரதி" என்பவரது ""பாடம்" எனும் கவிதை, கைநிறையச் சான்றிதழ்கள் பெற்றிருந்தும் தொழில் தேடி அலைந்து வாழ்க்கைப் பாடத்தைக்கற்கும் இளைஞர் சமூகத்துக்கு ஒரு பாடம் ஆகும்.

"செந்நீரால் காத்த பயிர் செழிக்க" என்ற தலைப்பில் சஞ்சிகை ஆசிரியரது எண்ணம் எமது மண்ணின்மீது வைத்துள்ள பற்றை எடுத்துக்காட்டுகின்றது.

அர்ப்பணிப்புடன் பல வழிகளிலும் ஆசிரியர் செயலாற்றும் போது அவரை இறைவனாகக் கொள்வதோடு நாடும் உயர்வடையும் என்ற தத்துவத்தை எடுத்தியம்புகின்றார். கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி பா. தனபாலன் அவர்கள்.

இன்று பல்வேறு ஊடகங்கள் வாயிலாகப் பலரது பகிரங்கப்படுத்தல், விளம்பரங்களைப் பார்க்கிறோம். இவ்வாறு தனிமனிதனின் நிலை உள்ளபோது நிறுவன அமைப்பில் ஒரு பாடசாலை வளர்ச்சியடைய அதனது பகிரங்கப்படுத்தல் துணைபுரிகின்ற தென்பதனை வல்வை. ந.அனந்தராஜ் அவர்களின் கட்டுரை தெளிவாக்குகிறது.

கணிப்பீடு பற்றி ஆசிரியர் சமூகத்தில் பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலை கொண்டுள்ள இக்காலத்தில் ஆசிரி யர்கள் கணிப்பீட்டைச் சுமையாகக்கரு தாமல் அதனைச் செயற்படுத்துவதைக் குறிப்பிட்டு ஆசிரியமணி எம். எஸ் ஸ்ரீதயாளன் அவர்கள் எழுதியுள்ள'கணிப்பீடும் ஆசிரியரும்' என்ற கட்டுரையின் கருத்துக்கள் சிறப்பாகவுள்ளன.

சர்வதேச தினங்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே என்பதை விளக்கமாகத் தந்துள்ளார். அல்ஹாஜ். யூ.எல். அலியார் அவர்கள்.

பொருத்தப்பாடற்றவர்கள் ஆசிரியராக நியமனம் பெறுவதால் ஏற்படும் தாக்கங்களையும், காலத்திற்குக்காலம் மாற்றமடையும் கல்விக் கோட்பாடுகளையும் அதன் தாக்கங்களையும் பற்றி "ஆசிரியவாண்மை ஒருநோக்கு" என்ற தொடரில் செல்லத்துரை சேதுராஜா அவர்கள் குறிப்பிடுகின்றார். அத்துடன் தொடரும் தொடரில் அன்றைய காலம்தொட்டு இன்றைய காலம் வரையான கல்வி வரலாற்றையும் தனது சீர்திருத்தக் கருத்துக்களையும் அனுபவங்களையும் முன் வைப்பார். என எதிர்பார்க்கின்றேன்.

க.ஜெயவீரசிங்கம் அவர்களின் 'நிறைவு' என்ற சிறுகதை ஆசிரியர்களுக்கு நிறைவைக் கொடுப்பதோடு ஏனையவர்களையும் மனிதநேய உணர்வுடன் அர்ப்பணிப்புள்ள, ஆசிரியர்களாக உருவாக வழிகாட்டும் என நம்புகிறேன்.

"சிரிப்போம் சிந்திப்போம்" என்ற கட்டத்துள் "ஒருமை - பன்மை" என்ற சிறுகதையின் மூலம் - தாம் கற்றுப் பெற்ற பட்டங்களை நிரைப்படுத்திப் பல்துறை ஆற்றல்களைத் தன்னகத்தே பெற்றிருந்தும் ஒருவன் ஏற்றுக்கொண்ட பணியில் மனச்சாட்சிக்கு ஒவ்வாதநிலையில் செயற்படுவானெனின் 'பாவம் மாஸ்ரர் பிள்ளைகள்' என்ற குரலால் விழிப்புணர்வைப் பெறுவான். என்பதை உணர்த்தும் செல்ல மகேந்திரன் பாராட்டுக்குரியவர்.

வாசித்தோம் - வாசிப்போம் என்ற பகுதியில் "பொங்குதமிழ்" எமது உரிமைக்கும், சுதந்திரத்திற்கும், விடுதலைக்கும் குரல்கொடுக்கும் எழுச்சியுணர்வை ஆசிரிய சமூகம் மீண்டும் மீண்டும் நினைவு கொள்ளவும் செயற்படவும் தூண்டுகிறது.

அமெரிக்கமிஷனரிமார் 19ஆம் நூற்றாண்டில் மாணவர்களைப் படிப்பதற்கு ஒழுங்குபடுத்திய முறையை "எஸ். ஜே" எடுத்துக்காட்டியமை. இன்றையகாலத்திற்கும் பொருந்தக்கூடிய தொன்றாகும். ஆசிரியர்கள் செயற்படமுனையின் மாணவர்கள் வளம் பெறுவர்.

அ. பஞ்சலிங்கம் அவர்களின் "அங்கும், இங்கும்" பகுதியில் 'சிற்பி'யின் சிந்தனைகளால் "அறிவுசார் சமூகத்தை உருவாக்க அர்ப்பணிப்புடன் நாம் கல்வி வழங்க முன் வரவேண்டும்" என வலியுறுத்துகிறார்.

"மெய்யறியக்கேளுங்கள்" பகுதி சிறப்பாக உள்ளது. இதன்மூலம் ஆசிரியர்கள் தமது சந்தேகங்களையும் ஆசிரியர் சேவையின் தாபன நடைமுறைகளையும் அறிந்துகொள்ள முடியும்.

முடிவாக ஆசிரியர் சமூகத்திற்கு 'விளக்கு' நன்றாக ஒளி கொடுக்கிறது. விளக்கு ஒளியில் நடக்கும் ஆசிரியர்கள் இடறி விழமாட்டார்கள்.

எனது வாழ்த்துக்கள்!

**ப. சந்திரசேகரம்**
**ஓய்வுபெற்ற ஆசிரியர்**
**நுணாவில் மேற்கு,**
**சாவகச்சேரி.**

**ஆசிரியர்: டிசம்பர் 2003 "விளக்கு" இதழினை முழுவதுமாக வாசித்து நீங்கள் எழுதிய கருத்துக்களுக்கும், புகழ்ச்சிகளுக்கும் நாம் நன்றியுடையோம். விளக்கு சஞ்சிகைகளைத் தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் விமர்சனங்கள் எமது வளர்ச்சிக்கு உதவும் என நம்புகின்றோம்.**

நாம் சிலரை வெறுப்பதற்குக் காரணம்
அவர்களைச் சரியாகப் புரிந்து
கொள்ளாததுதான்;
அவர்களைச்சரியாகப் புரிந்து
கொள்ளாததற்கான காரணம்
நாம் அவர்களை வெறுப்பதுதான்.

- ஸ்பானிய அறிஞர் -



2

# ஒரு பாடசாலையின் வளர்ச்சியில் பகிரங்கப்படுத்தல்

**ஒரு பாடசாலைக்குப் பகிரங்கப்படுத்தல் தேவைதானா?**

எதற்கும் பகிரங்கப்படுத்தல் (Publicity) தேவை

நாம் வாழ்ந்து கொண்டிருப்பது விளம்பரத்தையும் (Advertisement) பகிரங்கப்படுத்தலையும் (Publicity) தேடுகின்ற மனிதர்கள் வாழும் உலகம்!

உண்மையில் பகிரங்கப்படுத்தல் என்பது, ஒரு வகையில் விளம்பரப்படுத்தலாகவே இருந்தபோதும், எல்லாப் பகிரங்கப்படுத்தல்களும், விளம்பரங்கள் ஆகிவிடமாட்டாது. ஒரு தனிமனிதனையோ அல்லது பாடசாலை போன்ற ஒரு நிறுவனத்தையோ உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டக்கூடிய ஓர் ஒளியாக "பப்ளிசிட்டி" செயல்படுகின்றது.

**"சிறப்பாகத் தெரிவிக்கப்பட வேண்டிய தகவல்களை சீரான முறைப்படி ஒரு மனிதனிடம் இருந்து இன்னொரு மனிதனுக்கோ, அல்லது ஒரு மனிதனிடம் இருந்து பலருக்கோ அளிப்பதற்காக மேற்கொள்ளப்படும் தகவல் தொடர்பே பகிரங்கப்படுத்தல்" (Publicity) என அழைக்கப்படுகின்றது.**

காகங்கள் உணவு கிடைத்த செய்தியையோ அல்லது, தனது உடன் பிறப்பு ஒன்று தெருவில் இறந்து கிடக்கும் செய்தியையோ தனது உறவுக் காகங்களுக்குப் பகிரங்கப்படுத்தலாம் என்றால்,

"பொழுது விடிந்துவிட்டது. எல்லோரும் எழுந்து வாருங்கள்" என்ற செய்தியை அதிகாலையில், சேவல்கள் தமது மொழியில் கூவி "பப்ளிசிற்றி" செய்யலாம் என்றால்,

பல்வேறு துயரங்கள், அழுத்தங்கள் மத்தியிலும், அத்தியாவசிய வளங்கள் மறுக்கப்பட்ட நிலையிலும் பல சாதனைகளைப் படைத்து வரும் அதிபர்கள், தமது பாடசாலையின் செய்திகளை இந்தச் சகத்திற்கு ஏன் 'பப்ளிசிற்றி' செய்யக் கூடாது.

ஒரு முகாமையாளன், பகிரங்கப்படுத்தலை தனது நிறுவனத்தின் வளர்ச்சிக்காக அன்றி தனது சுயவிளம் பரத்திற்காக மேற்கொள்வாரேயானால், அத்தகைய பகிரங்கப்படுத்தல்கள், தவறான விளைவுகளை ஏற்படுத்துவதுடன் அவருடைய நற்பெயருக்கும் களங்கத்தை ஏற்படுத்திவிடும்.

## பகிரங்கப்படுத்தலை மேற்கொள்ளும் வழிமுறைகள்!

எந்த ஒரு செய்தியையும் பிறர் அறியச் செய்வதற்கு ஏதாவது ஒரு சாதனம் தேவை. ஒரு பாடசாலை அதிபர், தான் தெரிவிக்கவேண்டிய தகவல்களைப் பகிரங்கப்படுத்துவதற்குப் பொருத்தமான சாதனத்தைத் தெரிவு செய்வதற்கு முன், பின் வருவனவற்றைக் கவனிக்க வேண்டும்.

1. பகிரங்கப்படுத்தப்படவேண்டிய விடயம் என்ன (What) ?
2. பகிரங்கப்படுத்தல் யாருக்குப் (Who) போய்ச் சேர வேண்டும்?
3. பகிரங்கப்படுத்தலை ஏன் (Why) செய்யவேண்டும்?
4. பகிரங்கப்படுத்தல் எப்பொழுது (When) செய்யப்பட வேண்டும்?
5. பகிரங்கப்படுத்தலை எங்கே (Where) செய்யவேண்டும்?
6. பகிரங்கப்படுத்தலை எப்படிச் (How) செய்ய வேண்டும்?

இந்த 5 W க்களும், ஒரு H உம் கொண்ட வினாக்களுக்குத் தெளிவான விடைகளைத் தொகுத்து வைத்துக் கொண்ட பின்னரே, பகிரங்கப்படுத்துவதற் குரிய சாதனத்தைத் தெரிவுசெய்ய வேண்டும்.

இந்த 5 W க்களும் ஒரு H உம் செய்தியாளர்கள், தகவல் சேகரிப்பவர்கள், ஆய்வாளர்கள், பகிரங்கப்படுத்தலை மேற் கொள்வோர், விளம்பரதாரர்கள் ஆகியோ ருக்குத் தேவையான பொன் எழுத்துக்கள் (Golden Letters) ஆகும்.

ஆனால் எழுந்தமானமாக எவ்வித முன்னாயத்தமும் அற்ற நிலையில் செய் யப்படும் பகிரங்கப்படுத்தல் சில வேளை களில் ஒரு முகாமையாளருக்கு எதிராகப் பாரதூரமான விளைவுகளைக் கூட ஏற்படுத் திவிடும். ஆதலால் ஒரு முகாமையாளர் சரியான நேரத்தில், பொருத்தமான சாத னத்தின் மூலமாகப் பகிரங்கப் படுத்தலை மேற்கொள்ள வேண்டும்.

சில வேளைகளில் அவசர அவசர மாகத் திட்டமிடப்படாத வகையில் அதிபர் களால் மேற்கொள்ளப்பட்ட சில வகைப் பகிரங்கப்படுத்தல்களினால் அதிபர்களிற் சிலர், சங்கடங்களுக்கும், ஏமாற்றங்க ளுக்கும் உள்ளாக்கப்பட்ட சம்பவங்களும் நிறையக் காணப்படுகின்றன.



வல்வை ந. அனந்தராஜ்

உதாரணமாக, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கட்டடம் ஒன்று கட்டு வதற்கு ஏழு லட்சம் ரூபாவை வழங்கு வதாக வாய்மொழியாக வாக்குறுதி கொடுத் ததை அப்படியே நம்பிய ஓர் அதிபர் அந்தத் தகவலைப் பத்திரிகையினூடாகப் பகிரங்கப்படுத்திவிட்டார். அதன் விளைவு...? அவரது பாடசாலைக்கு அந்த ஆண்டு கல்வித் திணைக்களத்தினால் கிடைக் கவிருந்த நிதி ஒதுக்கீடும் இல்லாமற் போய்விட்டது. அதேவேளை பாராளுமன்ற உறுப்பினரால் ஒதுக்கப்படுவதாகக் கூறப் பட்ட நிதியும், நிதி ஒதுக்கீடு போதாமையால் அவருக்குக் கிடைக்காமல் போய்விட்டது.

எனவே பகிரங்கப்படுத்தலை மேற்கொள்வதற்கு முன்னர், அதிபர் பின்வரும் விடயங்கள் தொடர்பாகத் திட்ட மிட்ட பின்பே தீர்மானம் எடுக்க வேண்டும்.

## பகிரங்கப்படுத்தப்பட வேண்டிய விடயம் என்ன? (what)

ஒரு பாடசாலையில் தினமும் ஏதாவது சம்பவங்களோ, அல்லது நிகழ்ச்சி

களோ நடைபெற்றுக்கொண்டிருக்கும் அவற்றைப் பின்வருமாறு அவதானித்து வகைப்படுத்திக் கொள்ளலாம்.

1. நாளாந்தம் நடைபெறும் வழமையான சம்பவங்கள்

**உதாரணம்:-** கற்றல், கற்பித்தல், செயற்பாடுகள், ஆசிரியர் கூட்டங்கள், மாணவர்மன்றக் கூட்டங்கள்.

2. வருடத்திற்கு ஒரு தடவையோ அல்லது காலாண்டு அல்லது அரையாண்டுக்கு ஒரு தடவையோ என ஒழுங்கு படுத்தப்படும் நிகழ்ச்சிகள்

**உதாரணம்:-** வருடாந்த இல்ல மெய் வல்லுனர் போட்டிகள், பரிசளிப்பு விழாக்கள், நினைவுப்பேருரைகள், பாட சாலை அபிவிருத்திச்சங்கக் கூட்டங்கள், பயை மாணவர் சங்கக் கூட்டங்கள், சர்வ தேச பாடசாலை நூலகதினம், பேடன்பவல் தினம், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் தினம் போன்ற பல்வேறு வகைப்பட்ட நிகழ்ச்சிகள்

இவை பொதுவாக பாடசாலை களின் வருடாந்த அமுலாக்கல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்களாக இருக்கும். எனவே இவை திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிகள் என அழைக்கப்படுகின்றன.

3. எதிர்பாராத வகையில் இடம்பெறும் சம்பவங்கள்:

இவை எதிர்பாராத வேளைகளில் திடிரென ஏற்படுகின்ற சம்பவங்களாக இருக்கும். எனவே இத்தகைய சம்பவங்கள் திட்டமிடப்படாத சம்பவங்களாகும்.

உதாரணமாக, அகில இலங்கை ரீதியாக நடைபெறும் போட்டிகளில் பாடசாலை மாணவர்கள் அல்லது ஆசிரி யர்கள் சிறப்புப் பரிசுகள் பெறுதல், பொதுப்பரீட்சைகளில் அதிவிசேட சித்திகள் பெறுதல்.

திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு ஆசிரியர்களோ, மாணவர் களோ வெளிநாட்டுப்பரிசில் பெறுதல், நலன் விரும்பி அல்லது பழைய மாணவர் எவரே னும் அன்பளிப்பாகப் பெருமளவு நிதி உதவி வழங்குதல் போன்ற பெருமைப் படுத்தப்படக்கூடிய சம்பவங்களோ அல்லது எதிர்பாராத விதமாக ஏற்படும் இழப்புக்கள், விபத்துக்கள், இடமாற்றகள் என்பவையோ கூட இவ்வகையில் அடங்கலாம்.

இவை போன்ற சம்பவங்களில் எவற்றுக்குப் பகிரங்கப்படுத்தல் தேவை என்பதை முதலில் அதிபர் தீர்மானிக்க வேண்டும். அதன் பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

பகிரங்கப்படுத்தல், அல்லது பொது சனத் தொடர்பு போன்றவற்றை மேற்கொள் வதற்காக பொதுசனத் தொடர்பு அலுவல ராக (Public Relation officer) தகுதி யான ஆசிரியர் ஒருவரைக்கூட அதிபர் நியமித்து வைத்துக் கொள்ளலாம்.

இவ்வாறு பொதுசனத் தொடர் புகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்படும் ஆசிரியர், தனது பாடவேளைகளுக்குப் புறம்பாக ஒரு சேவையாகவே இதனை மேற்கொள்ளவேண்டும்.

பொதுவாகப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரிய நூலகர்கள் (Teacher Librarian) அல்லது உடற் கல்விக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் இதற்குப் பொருத்தமாக இருப்பார்கள்.

ஏனெனில் பொதுசனத்தொடர்பு இவர்களூடாகவே பெரும்பாலும் இடம்பெறு வதால் இத்தகைய ஆசிரியர்களே இதற் குப் பொருத்தமானவர்களாக இருப்பார்கள்.

பகிரங்கப்படுத்தல் யாருக்கு? ஏன்? எப்பொழுது? எங்கே? எப்படிச் செய்ய வேண்டும்? என்பவை பற்றிய விளக்கங் களுடன் அடுத்தமாத "விளக்கு" இதழில் நாம் சந்திப்போம். ⇨

# அங்கும் இங்கும்



## இளைஞர்களின் முன்மாதிரி

நாம், இரு உலகங்களை எம்முன் காணுகின்றோம். ஒன்று, கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த ஓரள வேனும் கல்வியறிவுள்ள சமுதாயம். கல்விக்கான ஊக்குவிப்பாக அரசினால் வழங்கப்படும் இலவசநூல், இலவசச் சீருடை, மானிய அடிப்படையிலான பிரயாணவசதி போன்றவற்றின் உச்சப் பயன்பாட்டினைப் பெற்றுக்கொண்டு வசதியடைந்த, வளங்கள் கொண்ட, நகர்ப்பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் கல்விகற்பவர்களுள் அனேகமானோர் இச்சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாவர்.

நான் இங்கே கூறவருவது இரண் டாவது உலகைப் பற்றியேயாகும். இச்சமுதாயத்தினைச் சேர்ந்த பெற்றோர்கள் பெரும்பாலும் எழுத வாசிக்கத் தெரியாதவர்கள். பொருளாதாரத்தில் பின் நிற்பவர்கள். பிள்ளைகளின் கல்வியிலே அக்கறையில்லாதவர்கள். அவர்களின் பிள்ளைகளுக்கென வசதியான பாடசாலைகள் இல்லை. பிள்ளைகளில் பலரும் பாடசாலைகளில் சேர்க்கப்படுவதில்லை, அப்படிச் சேர்ந்தாலும் ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்வதில்லை. அவர்களின் வசிப்பிடத்தில் சௌகரியமாக அமர்ந்து கற்பதற்கு மேசை. கதிரை வசதிகள் எதுவுமில்லை; கற்பதற்கு ஏற்ற சூழலும் இல்லை. இவர்களில் கணிசமானவர்கள் இடம்பெயர்ந்து முகாம்களில் வசிப்பவர்கள். இப்பிள்ளைகளுக்கு இலவசச்சீருடை, இலவசப்பாடநூல், பிரயாணமானியம் என்பனயாவும் பயனற்ற கொடுப்பனவுகளாகும். இந்த இரண்டாம் உலகம் பற்றி முதலாம் உலகத்தினர் பலரும் அறிந்திலர்.

மயிலிட்டி, பலாலி போன்ற இடங்களிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் பலர் சபாபதி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இம்முகாமில் வாழும் மக்கள் பல்வேறு வசதியீனங்களை அனுபவித்து வருகின்றனர்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட முதல்வருட மாணவர்கள் சிலர் இதனைக் கண்ணுற்று, மனவேதனை யடைந்து, அங்குள்ள பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்தத் தங்களால் ஆனவற்றினைச்செய்ய முன்வந்தனர். அவர்கள் தற்பொழுது அங்குள்ள முன்பள்ளியினை பலரது உதவியுடன் இயங்கவைத்துள்ளனர்.

அத்துடன் அங்குள்ள இளைஞர்களை ஒன்றுதிரட்டி பாடசாலையில் கற்கும் மாணவர்களுக்கு பின்னேர வகுப்புக்களை நடாத்த ஒழுங்குகள் செய்துள்ளனர். மாணவர்கள் இரவிலும் கற்கவசதியாக "பெற்றோமக்ஸ்" வழங்கியுதவியுள்ளனர்.

நான் இவர்களின் பின்னேர வகுப்புக்களைப் பார்வையிடச் சென்ற பொழுது, பார்த்த காட்சி உண்மையிலேயே மனதை உருக வைத்தது. ஓர் இளைஞன் முன்பள்ளியின் ஒரு சிறிய கட்டடத்தில் நின்று எதையோ கற்பிக்கின்றான். அவ்விளைஞனைச் சூழ 20 மாணவர்கள் வரையில் வெறும் நிலத்தில் கொப்பிகளை வைத்து எழுதிக்கொண்டிருக்கின்றனர். அந்த இளைஞன் அதே முகாமைச் சேர்ந்த ஒரு சமுர்த்தி உத்தியோகத்தர் என்பதை அறிந்துகொண்டேன். எவ்விதவேதனமுமின்றி அவ்விளைஞனுடன் அவரது நண்பர்கள் இருவரும் அப்பிள்ளை

களுக்குப் பின்னேர, இரவுநேர வகுப்புக்களை நடாத்துவது பாராட்டுதற்குரியது. அவர்களின் சேவை பிறருக்கும் ஓர் எடுத்துக்காட்டாக அமையும். இது இளைய தலைமுறை ஆசிரியர்களுக்குச் சமர்ப்பணம்.

இன்னுமொரு நல்ல செய்தியை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். யாழ் பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர்கள் சிலர் இளைஞர்சேவைக் கழக மென்ற ஒரு அமைப்பினை உருவாக்கி பின்தங்கிய கிராமங்களில் மாணவர்களின் கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். முதல் கட்டமாக உரும்பிராய் யோகபுரத்திலும், பால் பண்ணை கிராமத்திலும் பின்னேர வகுப்புக்களை அவர்கள் நடாத்தி வருகின்றனர். அவர்களுக்கு எமது பாராட்டுக்கள்.

### அறிவுசார் சமூகம்

சென்ற மாதம் இப்பந்தியில் அறிவு சார் சமூகம் பற்றிய குறிப்பு இடம் பெற்றது அதன் தொடர்ச்சியாக இக்குறிப்பைத் தருகிறேன். இலங்கையானது "அறிவுசார் சமூகம்" எனும் அந்தஸ்தினை அடைவதற்கு மேலும் பல தடைகளைத் தாண்ட வேண்டியுள்ளது. அவற்றினை இங்கு சுட்டிக்காட்டுவது அவசியமாகின்றது.

ஆசியாவில் எமது நாடு 92% எழுத, வாசிக்க ஆற்றலுள்ள மக்களைக் கொண்டு முன்னிலையிலிருந்தது. ஆனால் தற்பொழுது நிலைமை மாறிவிட்டது.

20ஆம் நூற்றாண்டில் தேசங்களின் பொருளாதார அபிவிருத்தியானது அவற்றின் இயற்கைவளம், முதலீடு, தொழிலாளர் போன்ற மூலகங்களில் தங்கியிருந்தன. ஆனால் இந்த நூற்றாண்டில் தகவல், அறிவு போன்ற மூலகங்களை எட்டக்கூடிய நாடுகளே மேலோங்குகின்றன. இதன் விளைவாக ஆசிய நாடுகள் பல எமது நாட்டினை முந்திச் செல்வதனை அவதானிக்கலாம். அந்நாடுகள் எழுதுதல், வாசித்தல், ஆகிய ஆற்றல்களுடன் மட்டும் நிற்காமல் "எழுதுதல் வாசித்தல் திறன்" என்பதற்கு புதியவரைபு கொடுத்து, கணிதம், விஞ்ஞான அறிவு, தகவல் தொழில் நுட்பம், கணனி விஞ்ஞானம் போன்றவற்றையும் சேர்த்துள்ளனர்.

எமது பாடசாலைகளில் சேர்வோரில் 2% வீதத்தினர் மட்டுமே பல்கலைக்கழகம் செல்லும்

## அ. பஞ்சலிங்கம்

வாய்ப்பைப் பெறுகின்றனர். ஆனால் தென்னாசியாவில் சராசரி 8% வீதத்தினர் பல்கலைக்கழக அனுமதியைப் பெறுகின்றனர். மலேசியா 12%, தாய்லாந்து 19%, சிங்கப்பூர் 32%, தென்கொரியா 68% என அந்நாடுகள் பல்கலைக்கழக அனுமதி வழங்குகின்றன.

அடுத்ததாக, மூன்றாம் நிலைக் கல்விக்கென நாடுகள் ஒதுக்குகின்ற நிதியினை அவற்றின் மொத்த உள்ளூர் உற்பத்தியின் (GDP) சதவீதத்தில் பார்ப்போமானால் நாம் 1% இலும் குறைந்த தொகையையே உயர்கல்விக்கு ஒதுக்குகின்றோம். அதேவேளை இந்தியா 2-2.5% ஒதுக்கியுள்ளது.

தற்பொழுது நாடுகளுக்கிடையிலான எல்லைகளை எல்லாம் கடந்து உலகரீதியான அறிவு, கல்வி, தகவல் தொழிநுட்பப் புரட்சி ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இவற்றை ஈடுசெய்யும் வகையில் எமது கல்வித்துறை செயற்படுகின்றதா? இப்புரட்சிவாடை எமது இளைஞரின் பால் வீசுகின்றதா? க.பொ.த.(உ/த) பரீட்சைக்கு 200,000 மாணவர்கள் வரை தோற்று கின்றனர். இவர்களில் 100,000 பேர் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி அடைகின்றனர். ஆனால் இவர்களுள் 1/6 பங்கினருக்கே அனுமதி வழங்கப்படுகின்றது. எனவே 85,000 மாணவர்களுக்கு உயர் கல்வி மறுக்கப்படுகின்றது.

அறிவுசார் சமூகத்தினை உருவாக்க விஞ்ஞானமும், விஞ்ஞான தொழில் நுட்பமும் அடிப்படையாகின்றது. ஆனால் இங்கு 2500 க.பொ.த. (உ/த) பாடசாலைகள் இருக்கின்ற பொழுதிலும் அவற்றில் 540 பாடசாலைகளிலேயே விஞ்ஞானத் துறைக்கல்வி வழங்கப்படுகிறது. அவற்றிலும் வசதிகளுள்ள ஆய்வுகூடங்கள் காணப்படுவதில்லை.

மேலே எடுத்துக்காட்டப்பட்ட பல குறைபாடுகளை நிவர்த்தி செய்து நாடு இன்றைய அறிவு சார்யுகத்தில் காலடி வைப்பதாக இருந்தால் புதிய சிந்தனைகள் எமது கல்விமுறைமையில் உருவாகுவது அவசியமாகும்.

# விளக்கு

கல்வியியலாளர்களே!
எழுத்தாளர்களே!
விளக்கு சஞ்சிகை
உங்களின் உயர்வான ஆக்கங்களை
எதிர்பார்க்கின்றது. எழுதுங்கள்.
எமக்கு அனுப்பி வையுங்கள்.

*வாசகர்களே!*

உங்கள் கருத்துக்களையும்,
விமர்சனங்களையும்
வரவேற்கின்றோம். எமக்கு எழுதுங்கள்.

தொடர்பு கொள்ளும் முகவரி:

ஆசிரியர்
**"விளக்கு"**
ஆசிரியர் வாண்மை விருத்திக்குழு,
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
யாழ் வலயக் கல்விப் பணிமனை,
யாழ்ப்பாணம்.

# மாணவர் கல்வி மேம்பட உழைப்போம்.

- பாடசாலை முகாமைத்துவம்,
- ஆசிரியர் செயலாற்றல். ஆதியாம்

திறமைகளை வளர்த்தெடுக்கும்பாரிய பணியில் ஈடுபடும்

## "விளக்கு"

உயிர்ப்புடன் உயர்ச்சிபெற வாழ்த்தும்,

## கட்டைவேலி, நெல்லியடி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

- நுகர்வுத் தேவையுடன்
  கலாசாரப் பெருமன்றத்தினூடாக
- சமூகமேம்பாடு
- படைப்பாளிகள் ஊக்குவிப்பு
- கல்விச் சமூக நலனோம்பல்
  - புலமைப்பரிசில் திட்டம்
  - புலமையாளர்கள் ஊக்குவிப்பு
- நூலக சேவை
- வாடகை சேவை
- கட்டட ஒப்பந்த சேவை
- தட்டச்சு, கணினி, மொழிபெயர்ப்புச்சேவை

ஆகியவற்றை எம் இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**மக்கள் தேவையை நிறைவு செய்வதே,**
**எமது இலக்கு!**



"கூட்டுறவே நாட்டுயர்வு"